www.padippakam.com

# மலையகத் தமிழரின் அரசியல் வரலாறும் இலக்கியங்களும்

கலாநிதி அம்பலவாணர் சிவராஜா

மலையக ஆய்வக வெளியீடு

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# மலையகத் தமிழரின் அரசியல் வரலாறும் இலக்கியங்களும்


ஆசிரியர்

கலாநிதி அம்பலவாணர் சிவராஜா

முதுநிலை விரிவுரையாளர்

பேராதனைப் பல்கலைக் கழகம்



வெளியீடு:-

மலையக ஆய்வகம்

10 பிறிம்ரோஸ் வீதி

கண்டி

இலங்கை

ஒக்டோபர் - 1992


படிப்பகம்

www.padippakam.com

தலைப்பு: மலையக இலக்கியமும்
அரசியல் வரலாறும்

தன்மை: ஆய்வுக் கட்டுரை

ஆக்கியோன்: கலாநிதி அம்பலவாணர் சிவராஜா

முதற் பதிப்பு: ஒக்டோபர் 1992

பதிப்புரிமை: ஆக்கியோனுக்கு

அச்சகம்: றோயல் பிரின்டர்ஸ்
190, கொழும்பு வீதி
கண்டி

வெளியீடு: மலையக ஆய்வகம்
10, பிறிம்ரோஸ் வீதி
கண்டி.

படிப்பகம்

www.padippakam.com

# பொருளடக்கம்


i பதிப்புரை

ii ஆசிரியர் உரை

i அறிமுகம் ... 1

ii வாய் மொழி இலக்கியங்களும் மலையகத் தமிழரின் அரசியல் வரலாறும் ... 6

iii மலையக இலக்கியங்களும் தொழிற்சங்கங் களும் ... 11

iv மலையக இலக்கியங்களும் தோட்டங்கள் தேசிய மயமாக்கப் பட்டமையும் ... 21

v முடிவுரை ... 27

vi குறிப்புகள் ... 31


படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# பதிப்புரை

மலையக மக்களின் சமூக வரலாறு இன்றும் முறையாக ஆராயப்படாத, ஆய்விற்குட்படுத்தப் படாத ஒரு விடயமாகவே இருந்து வருகின்றது.

ஒரு சில விடயங்கள் தொடர்பான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டிருப்பினும், அவை நிறைவானதாகவோ அல்லது தொடர்வதற்கான அறிகுறிகளோ தென்படவில்லை.

மலையகம் ஒரு தனித்துவமான சமூகம் என்ற அடிப்படையில் அச்சமூகத்தின் சமூக, பொருளாதார வரலாற்றுத் துறைகள் ஆய்வுக்குட்படுத்தப்படுவதும், வரலாற்றுக் காரணிகளை இனங்காணக் கூடிய ஆவணங்களை முறையாகத் தொகுத்து பராமரிப்பதும் அச்சமூகத்தின் தவிர்க்க முடியாத தேவை மட்டுமல்ல அது அச் சமூகத்தை சார்ந்தவர்களின் வரலாற்றுக் கடமையுமாகும்.

எனவே, இக் கடமையை நிறைவேற்றுவதில் நிறுவக ரீதியில் பங்களிப்பைச் செலுத்துவதை நோக்கமாகக் கொண்டு 'மலையக ஆய்வகம்'' உருவாக்கப்பட்டுள்ளது.

மலையக ஆய்வகத்தின் முதலாவது வெளியீடாக பேராதனைப் பல்கலைக்கழகத்தில் அரசறிவியற் துறையின் முதுநிலை விரிவுரையாளரான கலாநிதி அம்பலவாணர் சிவராஜா அவர்கள் எழுதிய ''மலையகத் தமிழரின் அரசியல் வரலாறும் இலக்கியங்களும்'' என்ற இந்த ஆய்வுக்கட்டுரையை நூல் வடிவில் வெளியிடுவதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

மலையக இலக்கிய உலகுக்கு கலாநிதி சிவராஜா அவர்களை அறிமுகம் செய்து வைக்க வேண்டிய அவசியமில்லை. ஏனெனில், அவர் பல்கலைக்கழக மாணவராயிருந்த காலம் முதல் இன்றுவரை மலையக கலை, இலக்கியங்களோடும், சமூக - அரசியலோடும் தன்னை இனங்காட்டி வருபவர் மட்டுமல்ல அத்துறைகள் சார்ந்த பல்வேறு ஆய்வுகளையும் நடத்தி பல கட்டுரைகள், ஆய்வறிக்கைகள் போன்றவற்றையும் எழுதியுள்ளவர் என்பது நாடறிந்த விடயமாகும்.

இந்நூலில் பிரசுரிக்கப்பட்டுள்ள ஆய்வுக்கட்டுரை மலையக ஆய்வகத்திற்கென எழுதப்பட்ட ஒன்றல்ல. எனினும் மலையக ஆய்வகத்தின் வெளியீடாக இக் கட்டுரையை வெளியிட அனுமதி வழங்கிய கலாநிதி அ. சிவராஜா அவர்களுக்கு நாம் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம்.

படிப்பகம்

www.padippakam.com

மலையக சமூக விவகாரங்கள் பற்றிய ஆய்வுகளை மேற்கொள்ள முன்வருபவர்களுக்கு ஆக்கப்பூர்வமான உதவிகளையும், ஒத்துழைப்புகளையும் வழங்குவதன் மூலம் அவர்களின் முயற்சிகள் ஊக்குவிக்கப்படுவதோடு அவர்கள் கௌரவிக்கப்பட வேண்டும் என்பது எமது எதிர்பார்ப்புகளில் ஒன்றாகும். அதன் அடிப்படையிலேயே இவ்வாய்வுக் கட்டுரையை சிறு நூலாக வெளியிடுவதென முடிவு செய்தோம்.

எமது இம் முயற்சியின் வெற்றியும், தோல்வியும் இது போன்ற பிரசுரங்களை விலைகொடுத்து வாங்குபவர்களினதும், இவற்றை சமூக தேவை கருதி முறையாகப் பயன்படுத்துபவர்களினதும் கைகளிலேயே பெரிதும் தங்கி இருக்கின்றது.

இப்பிரசுரத்தை அச்சு வடிவமைத்து புத்தகமாக உருவாக்கித்தந்த கண்டி றோயல் அச்சக உரிமையாளர்களுக்கும், அவ்வச்சக தொழிலாள சகோதரர்களுக்கும் எமது நன்றிகள் உரித்தாகட்டும்.

இறுதியாக, மலையக சமூகத்தின் எதிர்காலத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக மலையக ஆய்வகம் மேற்கொள்ளும் ஆக்கப்பூர்வமான முயற்சிகளுக்கு இயன்ற ஒத்துழைப்புகளை நல்குமாறு அனைவரையும் தோழமையுடன் வேண்டிக் கொள்கிறோம்.

ச. பாலகிருஷ்ணன்

மலையக ஆய்வகம்
10, பிறிம்ரோஸ் வீதி,
கண்டி

15-08-1992

படிப்பகம்

www.padippakam.com

# ஆசிரியர் உரை

மலையகத் தமிழரின் அரசியலோ அவர்கள் படைத்த இலக்கியங்களோ இன்னும் முறையாக ஆராயப் படவில்லை. பரந்ததொரு காலக் கட்டத்தை உள்ளடக்கி நிற்கும் அவர்தம் அரசியல் வரலாற்றினையோ, ஆக்க இலக்கியங்களையோ ஆராய்வதும் சுலபமானதல்ல. "மலையக தமிழரின் அரசியலும் இலக்கியங்களும்'' என்ற இந்தச் சிறிய நூல் அந்த நோக்கத்துடன் எழுதப் படவுமில்லை. மாறாக மலையகத் தமிழர் பற்றி எழுந்த இலக்கியங்களில் அவர்களது அரசியல் எவ்வாறு பிரதிபலிக்கப் பட்டுள்ளன என்பதை நோக்குவதே இச் சிறு நூலின் நோக்கமாகும்.

மலையகத் தமிழரின் அரசியலும் இலக்கியங்களும் என்ற இவ்வாய்வினை மேற்கொண்ட போது அதனை ஒரு குறிப்பிட்ட கால வரையறையினுள் நோக்குவதெனவே முடிவுசெய்தேன். ஆனால் சிறு நூலாக வெளிவரும் இவ்வாய்வில் கால வரையறை கைவிடப்பட்டுள்ளது.

எனக்குக் கிடைத்த மலையகத் தமிழர் பற்றிய அரசியல் இலக்கிய நூல்களை அடிப்படையாகக் கொண்டே இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டது. இவ்வாய்வில் மலையகம் பற்றிய இலக்கிய நூல்கள் ஏதாவது தவற விடப்பட்டிருப்பின் அதற்கு அந்நூல்களை பெற முடியாதிருந்தமையே காரணம் என்பதை ஒப்புக்கொள்கிறேன்.

மலையகத் தமிழரின் அரசியல் வரலாற்றை சில காலக் கட்டங்களாகப் பிரித்து அக் காலக்கட்டம் பற்றி எழுந்த இலக்கியங்களை ஒரு பிரிவாக ஆராய்ந்துள்ளேன். ஆனால் ஒரு காலக் கட்டத்தைச் சேர்ந்த எழுத்தாளர்கள் முன்னைய காலக் கட்டத்தைப் பின்னணியாகவும் கொண்டு எழுதியுள்ளார்கள் என்பதும் தெரிகின்றது.

இத்தகையதொரு ஆய்வினை மேற்கொள்வது என முடிவு செய்து அதனை ஆரம்பித்த போது எனக்குப் பல வகைகளிலும் உதவி புரிந்தோர் பலர். அவர்களுள் தன்னிடமுள்ள மலையக மக்கள் பற்றியெழுந்த நூல்கள் யாவற்றையும் தந்து உதவி இதனை உற்சாகப் படுத்தியவர் கலாநிதி துரை மனோகரன் ஆவார். இலங்கையில் கிடைக்காத மலையகம் பற்றிய சில இலக்கிய நூல்களை பேராதனைப் பல்கலைக் கழக நூல் நிலையத்தின் ஒதுக்குத் தொகுதியிலிருந்து தேடித் தந்து இவ்வாய்வினை நடத்த மிகவும் துணையாக இருந்தவர் அந் நூல் நிலையத்தில் பணி புரியும் திரு. ஆர். சிவலிங்கம் அவர்களாவர்.

படிப்பகம்

www.padippakam.com

இவ்வாய்வின் கையெழுத்துப் பிரதியைப் படித்துப் பார்த்து குறிப்புகள் சொல்லியும் மலையகம் பற்றிய சில நூல்களைத் தந்தும் பிரதியில் திருத்தங்கள் செய்தும் உதவியவர் கலாநிதி க. அருணாசலம் ஆவார். இவர்களுக்கு எனது மனமுவந்த நன்றிகள். இந் நூலை அச்சு வாகனம் ஏற்றுவதில் பெரிதும் இடர்களை அனுபவித்தேன். ஆனால் இது பற்றி கேள்விபட்டதும் தானே முன் வந்து தனது ஸ்தாபனத்தின் சார்பில் இதனை வெளியிட்டு உதவியவர் இலங்கை சமூக நிறுவனத்தை சேர்ந்த திரு. எஸ். பாலகிருஷ்ணன் ஆவார். இவருக்கு எனது நன்றிகள் உரித்தாகுக.

இறுதியாக, மலையக தமிழரின் அரசியலும் இலக்கியமும் என்ற இவ் வாய்வு பூரணமானதல்ல. இது ஒரு ஆரம்ப முயற்சியே என்பதையும் அறிவித்துக் கொள்கிறேன்.

கலாநிதி அம்பலவாணர் சிவராஜா

அரசறிவியல் துறை

பேராதனைப் பல்கலைக் கழகம்

26-6-1992

படிப்பகம்

www.padippakam.com

# அறிமுகம்

இலங்கையின் கடந்த கால தமிழ் இலக்கிய வரலாற்றினை ஆய்வுக்கு உட்படுத்துபவர்கள் "பிரதேச வாழ்க்கையைப் பொருளாகக் கொண்டு எழுதப்பட்டு வந்துள்ள படைப்புகளில் பெருந்தோட்டப் பயிர்ச்செய்கைக்கு களமாக உள்ள மலை நாட்டை மையமாகக் கொண்டு எழுதப் பட்டிருப்பனவற்றிற்குத் தனியிடமுண்டு"[1] என்பதை உணர்வர். பொதுவான ஈழத்து தமிழ் இலக்கியத்தில் மலையகத் தமிழ் இலக்கியம் தனித்துவம் வாய்ந்தது என்ற உரிமை பலராலும் வற்புறுத்தப் பட்டு வருகிறது. அது சரியா பிழையா என்பதை ஆராய்வது இச்சிறுநூலின் நோக்கமன்று. மாறாக மலையகத் தமிழரின் சமூக பொருளாதார அரசியல் பிரச்சினைகள் இம்மக்களைப் பற்றி எழுந்த இலக்கியங்களில் எவ்வாறு பிரதிபலிக்கப்பட்டுள்ளன என்பதை ஆராய்வதே இதன் நோக்கமாகும்.

மலையகம் என்ற சொல் அண்மையிற்றான் பெருமளவு புழக்கத்துக்கு வந்துள்ள போதிலும் 1940களில் சீ. வி. வேலுப்பிள்ளை அவர்கள் "தேயிலைத் தோட்டத்திலே" என்ற கட்டுரைத்தொடரை எழுதியபோது முதன் முதலாக இப்பிரதேசத்தினை பெருமையோடு 'மலைநாடு' எனக் குறிப்பிட்டிருந்ததாகத் தெரிகின்றது "மலையகம் என்ற சொல் இன்று பரந்துபட்ட அர்த்தத்தில் வழக்கிலிருக்கிறது. இலங்கை வாழ் இந்திய வம்சாவளித் தமிழரை இலங்கையின் எந்தப் பகுதியில் வாழ்ந்தாலும் மலையகத் தமிழர் என்று குறிப்பிடும் வழக்கம் இன்று ஏற்பட்டுள்ளது. பூகோள எல்லைகளை மீறியவிதத்தில் உணர்வு பூர்வமாக ஒரு சமுதாய மக்களை இனம் காட்டும் முறையே இது"[2] இம் மக்களுக்கு நூற்றி அறுபது வருட கால வரலாறும் சமூக பொருளாதாரப் பின்னணிகளும் கலாச்சாரமும் உண்டு. ஆகவே "மலையகம் என்பது இன்று வெறும் புவியியல் அர்த்தத்தை மாத்திரம் கற்பிப்பதன்றி, தன்னளவில் தனித்துவமான மக்கள் வாழ் நிலைகளையும், அதற்கு ஆதாரமான பெருந்தோட்டப் பயிர்ச் செய்கையையும், அதன் பக்க விளைவுகளான சிறு முதலாளித்துவத்தையும், சுரண்டல்களையும் புலப்படுத்தி நிற்கிறது."[3]

படிப்பகம்

www.padippakam.com



இலங்கையில் கோப்பிப் பயிர்ச் செய்கையை ஆரம்பித்து வைத்தவரான ஜோர்ய் பேர்ட் என்பவரும் அப்போது இலங்கையின் தேசாதிபதியாகவிருந்த எட்வேர்ட் பார்ன்ஸ் என்பவரும் இலங்கையில் நிலவிய தொழிலாளர் பற்றாக் குறையினை நிவர்த்தி செய்வதற்காக 1828 ஆம் ஆண்டில் முதன் முதலாக தொழிலாளர்களை இறக்குமதி செய்தனர். ஆகவே மலையகத் தமிழரின் அரசியல் வரலாறு 1828 இல் தான் ஆரம்பித்தது எனலாம். ஆனால் சி. வி. வேலுப்பிள்ளை அவர்கள் தனது "நாடற்றவர் கதை" என்ற நூலில் டச்சுக்காரர்கள் இந்தியாவையும் இலங்கையையும் ஆட்சி செய்த காலத்தில் முதன் முதலாக அவர்கள் தான் 10,000 தமிழ் தொழிலாளர்களை கருக மரத்தை (கருகபட்டை) பயிர் செய்து அதன் பட்டையை உரித்து பாடம் பண்ணுவதற்காக கொண்டுவந்தார்கள்[4] என்று குறிப்பிட்டுள்ளார்.

திருச்சிராப்பள்ளி, சேலம், தஞ்சாவூர், மதுரை, இராமநாதபுரம், புதுக்கோட்டை, வடஆற்காடு, தென்ஆற்காடு, திருநெல்வேலி போன்ற ஜில்லாக்களிலிருந்து ஏன் இவர்கள் இலங்கைத் தோட்டங்களுக்கு போக உடன் பட்டார்கள் என்பதை அறியவே இலக்கியங்கள் எமக்கு உதவுகின்றன. ஆனால் சுமார் ஒன்றரை நூற்றாண்டு காலத்தில் எழுந்த இலங்கியங்கள் அனைத்தையும் இத்தகைய சிறிய நூலொன்றில் ஆராய்வது சுலபமானதல்ல. ஆகவே மலையகத் தமிழர் அரசியல்வரலற்றை சில கட்டங்களாக வகுத்து அக்கட்டங்களில் நடந்த பிரதானமான அரசியல் திருப்பங்கள் அல்லது அரசியல் அநீதிகள் என்பவற்றை எவ்வாறு மலையகம் பற்றி மலையகத்தவரும் மற்றையோரும் படைத்த இலக்கியங்களில் வெளிக்கொணரப் பட்டுள்ளது என்பதை மட்டுமே இச்சிறு நூல் ஆராயும்.

இலங்கை வாழ் மலையகத் தமிழரின் அரசியல் வரலாற்றினை நாம் பின் வரும் கட்டங்களாகப் பிரிக்கலாம்:-
(i) 1928 ஆம் ஆண்டு தென்னிந்தியாவிலிருந்து தொழிலாளர்கள் இலங்கை வர ஆரம்பித்ததிலிருந்து 1931 ஆம் ஆண்டு வரை (ii) 1931 ஆம் ஆண்டின் டொனமூர் ஆணைக் குழுவின் சிபார்சுகளையடுத்து இந்திய வம்சாவளியினரின் வாக்குரிமை கட்டுப்படுத்தப்பட்டதிலிருந்து 1948 வரை, (iii) 1948 இல் கொண்டுவரப்பட்ட பிரஜாவுரிமைச் சட்டங்களிலிருந்து 1964 ஆம் ஆண்டின் சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தம் வரை (iv) 1964 ஆம் ஆண்டின் சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தம் தொடக்கம் 1972 இல் பெருந்தோட்டங்கள் தேசிய மயமாக்கப் பட்டமை வரை (v) 1972 க்கு பின்னர் - உண்மையில் தனியொரு நாவலை மட்

படிப்பகம்

www.padippakam.com



டும் எடுத்து அந்நாவலில் மட்டும் எவ்வாறு மலையகத் தமிழ ரின் அரசியல் பிரச்சினைகள் பிரதிபலிக்கப் பட்டுள்ளன என் பதை ஆராய்தல் கூடும். அதனை நாம் நுண்பாக ஆய்வு முறை எனக் கொள்கிறோம் மாறாக பரந்ததொரு காலப் பகுதியிலெ ழுந்த சகல இலக்கியங்களையும் ஆராய முற்படுதல் பேரண்ட ஆய்வு முறையாகும். ஆகவே இச்சிறு நூலில் பேரண்ட ஆய்வு முறையினை பயன்படுத்தி மலையக மக்கள் பற்றி எழுந்த இலக்கி யங்களில் எவ்வாறு அம்மக்களது அரசியல் பிரச்சினை, சமூக - பொருளாதாரப் பின்னணிகள் பிரதிபலிக்கப்பட்டுள்ளன என்ப தைக் காண்போம் அதனைக் காண முன்பு அரசியலுக்கும் இலக்கி யத்துக்குமிடையிலான தொடர்பு பற்றிய ஒரு கோட்பாட்டு விளக்கத்தினை காணுதல் பொருத்தமானதாகும்.

இலக்கியத்தில் அரசியல் இடம் பெறுமா இல்லையா அவ்வாறு இடம் பெற வேண்டுமாயின் எந்தளவுக்கு இடம் பெறலாம் என்பது வாதப்பிரதி வாதத்துக்குரிய விடயமாகவே இருந்து வந்துள்ளது. இலக்கியத்தில் அரசியல் இடம் பெறுவது தவிர்க்க முடியாதது என்பது இப்போது ஏற்றுக்கொள்ளப் படுகிறது ஆனால் அது இலக்கியத்தின் உருவத்தினையும் உள்ளடக் கத்தினையும் கெடுத்து விடாதவாறு கலாபூர்வமாக வெளிப் படுத்தப்பட வேண்டுமென்று வாதிடப் படுகிறது.

தமிழ் இலக்கியத்தில் அரச புகழ் பாடும் மரபு மிகவும் பழமையானது. ஆதிகாலத்திலும் மத்திய காலத்திலும் முடியாட் சியே நிலவியதாலும் மன்னனே அரசின் உருவமாகவும் வல்லமை பொருந்திய ஆட்சியாளனாகவும் விளங்கியமையாலும் அரசனைப் புகழ்ந்து பாடும் பாடல்கள் பலவற்றை நாம் தமிழ் இலக்கியத் தில் காண்கிறோம். ஆனால் முடியாட்சி மறைந்து மக்களாட்சி மலரத் தொடங்கிய பின் தமிழ் இலக்கியமும் மக்களாட்சி, ஜனநாயகம், சோசலிசம் என்பன பற்றியும் சாதாரண மக்களின் வாழ்க்கை பற்றியும் பேசத் தொடங்கியது.

அரசியல் என்பதை அரசு பற்றிய விஞ்ஞானம் என வரைவிலக்கணப் படுத்துவர். அரசாங்கத்தின் ஆட்சியினை நடத் தும் கலை அல்லது விஞ்ஞானமே அரசியல் என்பர். அரசியல் என்பது ஆட்சி, அதிகாரம் என்பன பற்றியதுமாகும். அரசியல் நடவடிக்கைகளில் நேரடியாகப் பங்கு பற்றாத மக்கள் உட்பட நாட்டு மக்கள் அனைவர் மீதும் அரசியல் செல்வாக்கு செலுத் துவதனால் தான் அரிஸ்ரோற்றல் மனிதனை ஒரு ''அரசியல் பிராணி'' என வர்ணித்ததோடு அரசியலை விஞ்ஞானத்தின் எசமான் எனவும் கொண்டார்.

படிப்பகம்

www.padippakam.com



இலக்கியம் வாழ்க்கையின் எதிரொலிகள் சமூகத்தின் வளர்ச்சியைக் காட்டும் மைல் கற்கள் - மனித இலட்சியத்தின் உயிர் நாடி எனப் புதுமைப் பித்தன் குறிப்பிட்டார். மனிதர்கள் தாம் இருக்கின்ற இடத்திலிருந்து இன்றும் உயர்ந்து திகழவே ஆசைப்படுகிறார்கள். இந்த ஆசையைத் தூண்டி அவர்கள் உயர் நிலை பெறுவதற்கும் முன்னேறுவதற்கும் துணை புரிவதுதான் இலக்கியத்தின் நோக்கமாக இருக்க வேண்டுமென்றார் மார்க்சிம் கோர்க்கி-வாழ்க்கை இன்பத்தை நுகர்வதற்கும் வாழ்க்கைத் துன்பத்தை பொறுத்தற்கும் நமக்குக் கற்பிப்பதே இலக்கியம் என்றார் ஆங்கிலேயரான ஜான்சன் என்பவர். சீனப் பெருந் தலைவரான மாஓசேதுங் அவர்களோ எழுத்தாளர்களும் கலைஞர்களும் சமுதாயத்தைக் கற்கவேண்டும். அதாவது சமுதாயத்தில் உள்ள பல்வேறு வர்க்கங்களை அவற்றின் பரஸ்பர உறவுகளையும் முறையே அவற்றின் திறமைகளையும் அவற்றின் தன்மைகளையும் அவற்றின் மனோவியலையும் கற்க வேண்டும். இவை அனைத்தையும் நாம் தெளிவாகத் தெரிந்து கொள்ளும் போது மட்டுமே எமக்கு உள்ளடக்கத்தில் செழிப்பானதும் நிலையில் சரியானதுமான ஒரு இலக்கியமும் கலையும் இருக்க முடியும் என்றார்.

இலக்கியங்கள் அனைத்தும் அவை எழுந்த காலத்தின் குரலாகவும் தமது காலத்து வாழ்வின் பிரதிபலிப்பாகவும் தமது மக்களின் உயர்ந்த அபிலாசைகளையும் இலட்சியத் துடிப்புகளையும் ஜனநாயக உணர்வோட்டங்களையும் சித்தரிப்பவையாகவும் இருந்துள்ளன. அதனாற்றான் இலக்கியத்தை சமூகத்தின் ஆத்மா எனக்கொள்கின்றனர். அரசியல் என்பது நாட்டு மக்கள் அனைவர் மீதும் செல்வாக்குச் செலுத்தும் ஒரு இயல் எனக் கண்டோம். அதே வேளை இலக்கியம் என்பது நாட்டு மக்கள் அனைவரையும் உள்ளடக்கிய சமூகத்தின் ஆத்மா எனின் அரசியலுக்கும் இலக்கியத்திற்கும் உள்ள தொடர்பு புலனாகின்றது. அதனால்தான் பேராசிரியர் க. கைலாசபதி "அரசியல் என்றும் சொல்லைக் கேட்டவுடனே அஞ்சிப் பதை பதைத்து அது இலக்கியத்துக்குப் புறம்பானது என எவரும் அஞ்ச வேண்டியதில்லையென்றே நான் நினைக்கிறேன். அரசியல் என்று கூறும் போது நாம் பொதுவாக கருதுவது என்ன? சில அரசியல் கருத்துகளையே நாம் கருதுகிறோம் அல்லவா!" [5] என்று குறிப்பிட்டார் திரு மு. நித்தியானந்தன் அவர்கள். "அரசியல் என்பது பொறுப்புணர்ச்சியோடு கூடிய ஒவ்வொரு சகமுஜீவியின் கவலையுமாகும். அரசியலிலிருந்து ஒருவர் விலகியிருக்கிறார் என்பது மனிதரின் சமூகஜீவிதத்தையே நிராகரிக்கின்ற மூடத்தனத்துக்கு சமமானதாகும் இலக்கியத்திலே அரசியலைக் கலப்

படிப்பகம்

www.padippakam.com



பதனால் இலக்கியத்தின் பத்தினித் தன்மை சிதைந்து போய் விடுவதாகக் குரல் எழுப்புவர்களை நாம் காலம் காலமாகக் கண்டு வந்துள்ளோம்''[6] என்றார்.

மாஒசேதுங் அவர்கள் குறிப்பிட்டது போல் இன்றைய உலகில் சகல கலை இலக்கியமும் திட்ட வட்டமான வர்க்கச் சார்பைக் கொண்டவை. திட்டவட்டமான அரசியல் போக்குகளுக்கு அமைந்தவை. கலை கலைக்காக என்பதோ, கலை வர்க்கங்களுக்கு அப்பாற்பட்டது என்பதோ, அரசியலிருந்து விடுபட்ட அல்லது சுய சார்பான கலை உண்டென்பதோ உண்மையில் நடைமுறையில் இல்லை. ஆகவே ''நேர்மையோடு சமுதாயத்தைப் பற்றிச் சிந்திக்கும் எந்தவொரு எழுத்தாளனும் அரசியல் சித்தாந்தங்களைப் புறக்கணிக்க முடியாது''[7] ஒரு இலக்கியவாதியின் அரசியல் அனுபவங்கள் என்ற நூலில் ஜெயகாந்தன் அவர்கள் பாரதியின் கவிதா மேன்மையைச் சொல்ல வந்தபோது ''இலக்கியமும் அரசியலும் இணைகின்றபோது, இப்படிப்பட்ட கவிமேன்மையில் சத்தியங்கள் வெளிப்படும் என்றார். எந்த அரசியலிருந்து இலக்கியமும் கவிதையும் வெளிவராதோ அது மக்களுக்கு உகந்ததல்ல''[8] என்று வாதிட்டார்.

தமது காலத்து முன்னேற்றகரமான அரசியற் சிந்தனைகளையும் நம்பிக்கைகளையும் ஹென்றிபார்பஸ், ரோமெஜின் ரோலண்ட், ஜக் லண்டன் போன்ற மூற்போக்கு நாவலசிரியர்கள் கதைகளாக்கியுள்ளனர். ஆகவே மொறிஸ் எட் மண்டஸ் பியர் என்பவர் குறிப்பிட்டது போல் ''அரசியல் நாவல் என்பது உணர்ச்சியோடு அல்லாது கருத்துகளைச் சார்ந்ததாய் ஒரு குறிப்பிட்ட கட்டத்தின் சிறப்புகளைப் பற்றியல்ல அக்கட்டத்தினை உருவாக்கிய இயந்திரத்தோடும் எமது நடத்தை பற்றிய கோட்பாட்டோடும் ஈடுபாடுகொண்ட உரை நடையில் அமைந்த கதையாகும்.''[9]

ஆகவே அரசியலைப் பிரதிபலிக்கும் இலக்கியம் என்பது ஆதிக்கம் செலுத்தும் அரசியல் சிந்தனைனை அல்லது அரசியல் சூழ்நிலையினைப் பகைப்புலமாகக் கொண்ட இலக்கியம் என்றே கருதலாம். ஆதிக்கம் செலுத்தும் அரசியல் சிந்தனையினை அல்லது அரசியல் சூழ்நிலையினை அதிகம் திரித்துக் கூறாத ஒரளவு ஆய்வினை மேற்கொள்ளக் கூடிய ஒரு இலக்கியத்தினையே நாம் அரசியலைப் பிரதிபலிக்கும் இலக்கியம் எனக் கூறலாம்.

படிப்பகம்

www.padippakam.com

# II

# வாய் மொழி இலக்கியங்களும் மலையகத் தமிழரின் அரசியல் வரலாறும்

அறிஞர் முகமது சித்திலெப்பை, வித்துவதீவம் அருள் வாக்கி அப்துல் காதிர் என்போரே மலையக தமிழ் இலக்கியத்தின் முன்னோடிகளாகக் கொள்ளப்படுகின்றனர். இவர்களுள் இலங்கையின் முதலாவது நாவலான 'அசன்பேயின் கதை' என்பதை எழுதியவரான சித்திலெவ்வை அவர்களது எழுத்துக்கள் தூங்கிக் கிடந்த சமூகத்தைத் தட்டியெழுப்பி அந்நியர் ஆட்சியிலிருந்து விடுபட வேண்டுமென்ற தேசிய உணர்வினையும் ஏற்படுத்தியது இவர் தமது காலத்தில் சில பத்திரிகைகளையும் வெளியிட்டார். மலைநாட்டில் மட்டுமல்ல மற்றைய இடங்களிலும் பெரும் கவிஞராக மதிக்கப்பட்ட அப்துல் காதிர் அவர்கள் பல பாடல்களை இயற்றி மலையக மக்களிடையே பாடிக்காட்டியவராவார். இவர்களைத் தொடர்ந்து நாவலப்பிட்டி பெரியாம்பிள்ளை, எஸ். எஸ். நாதன், ஜபார், கந்தசாமிக் கவுண்டர், சிதம்பரநாதபாவலர். எட்மண்ட் ஏ விஜயரத்ன என்போர் கதிர்காமம், மலைநாட்டு நகரங்கள், அரசியல் சம்பவங்கள் என்பன பற்றிப் பாடல்கள் புனைந்தனர்.

இருந்தும் தென்னிந்தியத் தமிழ் தொழிலாளர் இலங்கைக்கு ஏன் வரவேண்டி ஏற்பட்டது என்ற சமூக பொருளாதார, அரசியல் காரணிகளை தமது எழுத்துக்களில் தந்தோர் புதுமைப் பித்தனும் திருமதி கோகிலம் சுப்பையாவும் ஆவர். புதுமைப் பித்தன் எழுதிய துன்பக்கேணி என்ற சிறுகதை திருமதி கோகிலம் சுப்பையா அவர்களின் தூரத்துப் பச்சை எனும் நாவலும் தொழிலாளர்களாக இலங்கைக்கு வந்த இந்த மக்களின் சோகக் கதைகளைச் சித்திரங்களாக எமக்குத் தீட்டிக் காட்டுகின்றன.

புதுமைப் பித்தன் தனது கதையில் வாசவன் பட்டி எனும் கிராமத்தில் வாழ்ந்த வெள்ளையனும் அவனது மனைவி

படிப்பகம்

www.padippakam.com



மருதியும் பண்ணையாரின் அடக்கு முறைகளால் பட்ட கஷ்டங்களையும் அங்கு நிலவிய வரட்சி, வறுமை பணமுடை என்பவற்றையும் எடுத்துக்காட்டினார். ''அப்பொழுது தேயிலைத் தோட்டத்துக்கு ஆள்பிடிக்கும் ஏஜெண்டு ஒருவன் வந்தான். பறைச்சேரியில் தேயிலைத் தோட்டம் இவ்வுலக வாழ்க்கையில் மோட்சம் போலத் தோன்றியது. திரைகடல் ஓடியாவது திரவியம் தேட வேண்டுமாமே. அதற்காக திரைகடல் ஓடிச் சுதந்திரத்தைப் பணயம் வைத்தால் என்ன? கடைசியிலாவது ஏதாவது மொத்தமாக கொண்டு வரலாமே. மருதியும் அவளுடைய தாயாரும் கங்காணியுடன் கொழும்புக்குப் புறப்பட்டார்கள்''[10] என்று அக்கதை தொடர்கிறது.

இதே போன்று கோகிலம் சுப்பையா தனது நாவலில் ராமநாதபுரம் ஜில்லாவிலிருந்து சேத்தூர் கிராமத்தைப் பற்றிக் குறிப்பிடுகிறார். அங்கு மூன்று வருடங்களாக மழையில்லை அதனால் அங்கு பசியும் பட்டினியும் தாண்டவமாடியது. அங்கு வாழ்ந்த மக்கள் பெரும் துன்பங்களுக்கு உள்ளானார்கள். இவ்வாறு தவித்துத் திண்டாடியவர்களில் வேலனும் ஒருவன் என்று தனது நாவலை ஆரம்பிக்கிறார். ஒருநாள் அந்த ஊரில் தண்டோரா போட்டு ''எல்லோரும் கேளுங்க! எல்லோரும் கேளுங்க! கண்டிச் சீமைக்கு ஆள்தேவை யார்யார் போக விரும்புறாங்களோ கங்காணிக் கருப்பையாவை போய்ப்பாருங்க''[11] என்று சொன்னார்கள். என்றும் இதனைக்கேட்ட வேலன் நாம்ப எல்லாம் கண்டிச் சீமை போவலாம்னு முடிவு பண்ணிட்டேன் என்று சொன்னான் என்று அந்நாவல் தொடர்கிறது. ஆகவே மேற்சொன்ன சிறுகதையிலும் நாவலிலும் இந்த மக்களை இலங்கைக்கு வரத்தூண்டிய சமூக பொருளாதார, அரசியல் சூழ்நிலைகளை நாம் அறியக்கூடியதாக உள்ளது.

இவ்வாறு இலங்கைக்கு வரத் தோணி ஏறியவர்களில் நூற்றுக்குப் பதினைந்து சதவீதம் படகுகள் கவிழ்ந்து இறந்துவிட்டதாக அறிகிறோம். புயல்காற்றுக்குத் தப்பிய தோணிகளில் வந்தவர்கள் மன்னார், அரிப்பு, கொழும்பு, நீர்கொழும்பு போன்ற இடங்களில் இறக்கப்பட்டு பாதசாரிகளாய் காடு, மணல்வெளி, தனிப்பாதைகள் வழியாய் 212 மைல்கள் இட்டுச் செல்லப்பட்டனர். ''ஒலையடிப் பண்ணையிலிருந்து மாங்குளம் வரை பெருங்காடு பிரயாணத்தில் இது பெருஞ்சோதனையான கட்டம். சாவு இவர்களுக்கு இங்கு காத்திருந்தது.

நடக்க முடியாத தோழர்களை
எவ்வளவு தூரம் தூக்கிச்செல்ல

படிப்பகம்

www.padippakam.com



> முடியும்? 10 மைல், 15 மைல் தூக்கி
> களைத்து முடியாத நிலையில்
> நடுகாட்டில் மிருகங்களின்
> கடாட்சத்துக்கு இவர்களைப்
> போட்டார்கள். இந்த துர்ப்
> பாக்கிய நிலைக்கு ஆளானவர்
> கள் கையை நீட்டிக் கதறி
> யழுவார்கள். ஒரு சிரட்டையில்
> தண்ணீரும் இலையில் கொஞ்ச
> ஆகாரமும் வைத்துவிட்டு உள்ளம்
> குமுறியழுது கண்ணீருடன் சுற்றத்
> தவர் புறப்படுவார்கள்.[12]

1856 இல் வடமாகாண அரசாங்க அதிபராக இருந்த டைத் இவர்களின் நிலைபற்றி தனது அறிக்கையொன்றில் குறிப்பிட்டுள்ளார். தோட்டக் கம்பனிக்காரர்களிடம் கங்காணிகள் வேண்டிய பணத்தை இத்தொழிலாளர்களுக்காகச் செலவிடாத தனால்தான் அவர்களில் பலர் இறந்தனர் எனத் தெரிய வருகிறது. இவ்வாறு இவர்கள் பட்ட சொல்லொணாத் துயரங்களை மலையகத் தமிழரிடையே இன்றுவரையில் நிலவிவரும் வாய்மொழிப் பாடல்கள் எடுத்தியம்புகின்றன. உண்மையில் இத்தொழிலாளர்கள் இலங்கைக்கு வந்தபோதும் வந்தபின்னரும் அனுபவித்த இன்னல்களையும் அரசியல் பிரச்சினைகளையும் அடக்குமுறைகளையும் வாய்மொழி இலக்கியங்களுக் கூடாகத் தான் அறியக்கூடியதாக உள்ளது உதாரணமாக.

> வீடு விட்டு வீடு போனால்
> நான் அழுவேன்
> ஊரு விட்டு ஊரு போனா
> நான் துடிப்பேன்
> நாடு விட்டு நாடு போனா
> நாட்டாமையே நான் என்னா
> செய்வேன்?[13]

இவ்வாறு நாடு விட்டு நாடு போகும் துன்பத்தை மேற் சொன்ன வாய்மொழிப்பாடல் எடுத்துக் கூற மலைநாட்டுத் தோட்டங்களுக்கு வந்ததின் பின் அவர்களுக்கு அங்கே அரிசி கசந்தது. குடிதண்ணீர் கசந்தது. அதனைப் பின்வரும் பாடல் எடுத்துக் காட்டுகிறது.

படிப்பகம்

www.padippakam.com



காருதடி கம்பரிசி
கசக்குதடி காணுத் தண்ணி
இனிக்குதடி நம்மூரு
இனிப்பயணம் கிட்டுமா?[14]

மேற்சொன்ன பாடலில் அவர்கள் திரும்பவும் தாய்நாட்டுக்குத் திரும்பிவிட நினைக்கும் அவாத்தொனிக்கிறது. தோட்டங்களைத் துப்புரவாக்கி எத்தனையோ அபாயங்களுக்கு மத்தியில் மலைச்சாரல்களில் கூனியடித்து குழிவெட்டி கோப்பி நட்டமையினை பின்வரும் பாடல் எடுத்தியம்புகிறது.

கூனி அடித்தமலை
கோப்பி கண்ணு போட்ட மலை
அண்ணனைத் தோத்த மலை
அங்கே தெரியுது பார்[15]

அவ்வாறு தாங்களே ஆக்கிய கோப்பித்தோட்டத்தில் ஒரு கோப்பிப்பழம் தவறிவிட்டதற்காக எவ்வாறு சின்னத்துரை உதைத்தான் என்பதைப் பின்வரும் பாடல் வெளிப்படுத்துகிறது.

கோண கோண மலையேறி
கோப்பிப்பழம் பறிக்கையிலே
ஒரு பழம் தப்பிச்சின்னு
உதைச்சானய்யா சின்னத்துரை[16]

அதே போன்று தேயிலை தோட்டங்கள் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் அவர்கள் அட்டைக்கடிக்கு ஆளானதை

அட்டைக்கடி தாங்கலியே அம்மா
ஆருகிட்டே சொல்வேன் அம்மா
ரத்தம் போகுதே அம்மா – அட்டை
சத்தம் போடாமல் கடிக்குதே[17]

என்ற பாடல் விளக்குகிறது. ஆனால் அரசியல் ரீதியில் தொழிற்சங்கத் தலைவரைப் பார்த்து முறையிடும் பின்வரும் பாடல் அவர்களின் உண்மை நிலையினை வெளிப்படுத்துகிறது.

தலைவரே! தலைவரே! பாருமையா
தரித்திரம் நீக்கிக் காட்டுமையா
உழைப்பதற்கு நியாயம் சொல்லையா
உண்மைகள் வெல்லும் ஒருநாள் ஐயா.[18]

படிப்பகம்

www.padippakam.com



இவ்வாறு வாய்மொழி இலக்கியம் மலையக மக்களது ஆரம்ப காலத்து அரசியல் சமூக பொருளாதார நிலைகளை படம்பிடித்துக் காட்டியுள்ளதை நாம் காண்கிறோம். அந்தனி ஜீவா அவர்கள் குறிப்பிட்டதுபோல் "கிராமியப் பாடல்கள், தோட்டப்பாடல்கள், தெம்மாங்கு, குரவைப்பாடல் ஒப்பாரி எனக்குறிப்பிடப்படும் இவ்வாய்மொழி இலக்கியப் பாடல்கள் மலையக மக்களின் இதயத்து அடிமன உணர்வுகளை அவர்களது ஆசாபாசங்களை அழகுற வெளிப்படுத்துகின்றன."[10]

இலங்கையிலும் மற்றைய பிரித்தானிய காலனி நாடுகளிலும் ஒப்பந்தத் தொழிலாளர்கள் படும் துன்பங்களைத் தெரிந்து கொண்ட இந்திய அரசாங்கம் இலங்கைக்கு தொழிலாளர் குடிபெயர்வதைத் தடை செய்தது. ஆனால் இத்தொழிலாளர்கள் இலங்கையில் வாழும் மற்றைய உள்ளூர் மக்களுடன் சமமாக நடத்தப்படுவார்கள் என்ற உறுதி மொழியினை அப்போதைய இலங்கை அரசாங்கம் வழங்கியதால் 1847 இல் இத் தடை நீக்கப்பட்டது. இதனை திருமதி கோகிலம் சுப்பையா தனது நாவலில் குறிப்பிட்டுள்ளார். இத் தடை நீக்கப்பட்டதோடு அதிக எண்ணிக்கையான தொழிலாளர்கள் இலங்கைக்கு குடிபெயர ஆரம்பித்தனர் அத்தோடு கோப்பிப் பயிர்ச் செய்கையினைப் போலன்றி தேயிலை பயிர்ச் செய்கைக்கு ஆண்டு முழுவதும் தொழிலாளர்கள் தேவைப்பட்டமையால் இவ்வாறு குடிபெயர்ந்து வந்த தொழிலாளர் இலங்கையிலேயே நிரந்தரமாக குடியமரத் தொடங்கினர்.

படிப்பகம்

www.padippakam.com

# III

## மலையக இலக்கியங்களும் தொழிற்சங்கங்களும்

1931 இல் இலங்கைக்கு அரசியல் சீர்திருத்தங்களைச் சிபார்சு செய்யவென வந்த டொனமூர் ஆணைக் குழுவினர் இலங்கையில் வாழ்ந்த இந்திய வம்சாவளியினர் உட்பட எல்லாப் பிரசைகளுக்கும் சர்வசன வாக்குரிமை வழங்கப்படவேண்டுமெனச் சிபார்சு செய்தனர். ஆனால் இதனை சிங்களத் தலைவர்கள் குறிப்பாக கண்டியச் சிங்களத் தலைவர்கள் எதிர்த்தனர். இதனால் இடைக் கால நடவடிக்கையாக காலனித்துவ காரியாலயம் ஓர் தீர்வினை முன்வைத்தது. இதன்படி இந்திய வம்சாவளியினர் தமது வாக்குரிமையினைப் பெறவேண்டுமாயின் தாம் இலங்கையில் ஐந்து வருடங்கள் தொடர்ந்து குடியிருந்தமைக்கான அத்தாட்சியினை நிரூபிக்க வேண்டியிருந்தது. ஆனால் 1930 களின் பிற்பகுதியில் இந்திய வம்சாவளியினரை இலங்கையராகப் பதிவு செய்வதில் இலங்கை அரசாங்கம் காட்டிய கெடுபிடிகள் காரணமாக 1939 இல் 225,000 ஆக இருந்த இந்திய வாக்காளர்கள் தொகை 1943 இல் 168,000 ஆகக் குறைந்தது. இதனால் 1931 ஆம் ஆண்டில் 818,500 மலையகத் தமிழர் இலங்கையில் வாழ்ந்த போதும் 1936 ஆம் ஆண்டுத் தேர்தலில் அரசாங்க சபையில் 2 ஆசனங்களைப் பெற முடிந்தது.

1939 ஆம் ஆண்டில் தோட்ட தொழிலாளர்களுக்கு ஒவ்வொரு நாளும் சம்பளம் வழங்கும் முறையை இலங்கை அரசாங்கம் நிறுத்தியதை விசாரணை செய்வதற்காக வந்த இந்திய தேசியத் தலைவரான திரு ஜவகர்லால் நேரு அவர்கள் இத்தொழிலாளர்களின் நலன்களைக் காப்பதற்காக இலங்கை இந்தியர் காங்கிரஸ் என்ற அமைப்பையும் காங்கிரசுடன் இணைந்த தொழிற் சங்கமான இலங்கை இந்தியர் காங்கிரஸ் தொழிலாளர் யூனியனை உருவாக்க உதவினார். இலங்கை இந்தியர் காங்கிரஸ் ஆரம்பிக்கப் பட்டதிலிருந்து இன்றுவரை மலையகத் தமிழரின் அரசியலில் தொழிற் சங்கங்களே பெருமளவு ஆக்கிரமிப்புச் செலுத்தி வந்துள்ளன. ஆகவே மலையகத் தமிழரின் அரசியலில் தொழிற்சங்க அரசியல் பிரதானதொரு இடத்தைப் பெறுகின்றது.

படிப்பகம்

www.padippakam.com



மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் நலன்களிலும் அவர்களது தொழில் நிலைமைகளிலும் முதன் முதலில் ஆர்வம் கொண்டவர் சேர். பொன் அருணாசலம் ஆவார். ஆனால் பெருந்தோட்டங்களில் தொழிற்சங்கங்களை நிறுவுவதில் பிரதான பங்கு கொண்டவர் தென்னிந்தியாவிலிருந்து இங்கு வந்து அரசியலில் பங்கு பற்றிய நடேசய்யராவார். முதலில் நகர்ப்புற தொழிற் சங்க தலைவராகவிருந்த ஏ. ஈ. குணசிங்காவுடன் ஒத்துழைத்த நடேசய்யர் 1928 இல் குணசிங்கவோடு ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் காரணமாக குணசிங்கா தனது தொழிற் சங்கத்திலிருந்து ஐயரை வெளியேற்றி விட்டார். இலங்கை தொழிலாளர் கழகத்திலிருந்து வெளியேற்றப்பட்ட நடேசய்யர் 1931 இல் தோட்டத் தொழிலாளர்களுக்கென அகில இலங்கை தோட்டத் தொழிலாளர் சம்மேளனத்தை உருவாக்கினார். ஆகவே இக்காலக் கட்டத்தை (1931-1948) தொழிற் சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்ட காலம் எனலாம். மலையக தமிழ் இலக்கியத்துக்கு வித்திடப்பட்ட காலமும் இதுவேயாகும். அப் பெருமைக்குரியமூவர் முறையே கோ. நடேசய்யர், திரு சீ. வி. வேலுப்பிள்ளை, திரு கே. கணேஸ் என்போராவர் இவர்களோடு கோகிலம் சுப்பையா, நந்தி, சக்தீ, ஏ. பாலையா, திரு க. ப. சிவம் திரு. ராமு நாகலிங்கம் என்ற மூத்த தலைமுறை எழுத்தாளர்களும் மலையக இலக்கியம் வளர உரமிட்டனர். இவர்களுள் தொழிற்சங்க வாதியாகவும் பத்திரிகை ஆசிரியராகவும் இருந்து மலையக தமிழ் இலக்கியம் வளர தன்னை அர்ப்பணித்தவர் திரு கோ. நடேசய்யர் ஆவார். இவரைப் பற்றி ஆராய்ந்து 'தேசபக்தன் கோ. நடேசய்யர்'' என்ற நூலை வெளியிட்ட 'சாரல் நாடன் ''பதினான்கு அச்சிட்ட நூல்களுக்கும் ஆசிரியராகவும் 12 ஆங்கில, தமிழ் பத்திரிகைகளுக்கு பத்திராதிபராகவும் சாதனை புரிந்த இவரைப் போல் பரந்துபட்ட எல்லையில் கால் விரித்து நடை பயின்ற இன்னோர் இலக்கியவாதியை மலையகம் இது காலவரை உருவாக்கவில்லை''[20] என்று குறிப்பிட்டுள்ளார். மேற்சொன்ன கூற்று ஐயர் மலையக இலக்கியத்துக்கு ஆற்றிய பணியினை தெளிவாக்குகின்றது.

இலங்கையிலும் வெளிநாடுகளிலும் மிகவும் ஆற்றல் மிக்க கவிஞனாக மதிக்கப்பட்ட சீ. வி. வேலுப்பிள்ளை அவர்கள் ஒரு தலைசிறந்த தொழிற்சங்க வாதியுமாவார். மறைந்த பேராசிரி க. கைலாசபதி அவர்கள் குறிப்பிட்டது போல் ''சுதேசிய, மேற்கத்திய வீச்சுகளினதும், யதார்த்தத்தினதும் இலட்சிய வாதத்தினதும் சேர்வைகளாக விளங்கியவர். முதலாவது பாராளுமன்றத்தில் தலவாக்கொல்லைத் தொகுதியின் பிரதிநிதியாகக் கடமையாற்றிய திரு சீ. வி. அவர்களின் (IN CEYLON TEA GARDEN) இன் சிலோன் ரீ காடன் என்ற ஆங்கில நூல்

படிப்பகம்

www.padippakam.com



இலங்கையிலும் வெளிநாடுகளிலும் பெரும் மதிப்பையும் கணிப் பையும் தேடிக்கொடுத்தது. தேயிலை தோட்டத்திலே என மொழி பெயர்க்கப்பட்டது இவரது கவிதைத் தொகுதியின் ஒரு பகுதி பின்வருமாறு.

ஊனையும் உடலையும் ஊட்டி இம் மண்ணை
உயிர்த்தவர் இங்கே உள்ளங்கனிந்தன்பு
பூணுவார் இல்லை (அவர்) புதை மேட்டின் ஒரு கானகப்
பூவைப் பறித்துப் போடுவார் இல்லையே[21]

இவர் "விஸ்மாஜினி" என்ற கவிதை நாடகத்தையும் "வழிப்போக்கன்" என்ற வசன கவிதையையும் "உழைக்கப் பிறந்தவர்கள்" என்ற உரை நடைச் சித்திரத்தையும் எழுதி வெளியிட்டவர். மேலும் "வாழ்வற்ற வாழ்வு", ' எல்லைப்புறம்", "பார்வதி", "வீடற்றவன்" என்ற நான்கு நாவல்களையும் எழு தியவர் மலையக மக்களின் குடியுரிமை பறிக்கப் பட்டபோது இ. தொ. கா. நடத்திய நூறு நாட்கள் நீடித்த சத்தியாக்கிரகத் தின் போது ஒரேயொரு இரவிலேயே "நூறாவது நாள்" என்ற கவிதையை இவர் இயற்றினார். இலங்கையின் தாகூர் எனக்கல் கியினால் பாராட்டப் பட்ட சீ. வி. யினை "நாடற்ற - உரிமை யற்ற - எட்டு லட்சம் மலை நாட்டு மக்களின் இதய ஒலியாக கேட்பது இவருடைய குரல்"[22] என்று பம்பாயில் இருந்து வந்த "பாரதி ஜோதி" இவரைப் பாராட்டியது.

மலையகத் தமிழ் இலக்கியத்திற்கு வித்திட்ட இன் னொரு எழுத்தாளர் திரு கே. கணேஷ் ஆவார். இவர் மலை யகத் தமிழரின் அரசியலை தனது படைப்புகளில் பெருமளவுக் குப் பிரதிபலிக்காவிடினும் தொழிலாளர் பால் மிகவும் பற்று டையவர். இவர் ஆங்கிலத்தில் எழுதிய கவிதைக்கு யப்பானிய அரச மாளிகையிலிருந்து பாராட்டுதல் கிடைத்தன. 1941 இல் துறைமுகத் தொழிலாளர்களின் வேலை நிறுத்தத்தினை பின்ன ணியாகக் கொண்டு எழுதி "நவசக்தி" யில் வெளிவந்த கவிதை இவரது முற்போக்கு இலட்சியத்தினையும் தொழிலாளர் வர்க் கத்தின் மீது இவருக்கிருந்த ஈடுபாட்டையும் வெளிப்படுத்தியது. அக்கவிதையின் ஒரு பகுதி பின்வருமாறு.

லாபம் மட்டும் எங்கள் தொரைக்கு மாசம்
லட்சக் கணக்கிலே கெடைக்கிறதாம்
கோபம் வரும் நாங்கள் தொரையிடம்
கொஞ்சம் சம்பளம் கூட்டு என்றால்[23]

படிப்பகம்

www.padippakam.com



1943 இல் ''நவசக்தியில்'' இவரது 'உழவன் வாழ்க்கை' என்ற கவிதையும் விரகேசரி இவரது மற்றைய கவிதைகளையும் வெளியிட்டு வந்தது. அஞ்சலி, மித்திரன் போன்றவற்றிலும் இவரது கவிதைகள் வெளியி ப்பட்டன. தனது மொழி பெயர்ப்புகளால் மலையக தமிழ் இலக்கியத்திற்கு மாத்திரமல்ல தமிழ் இலக்கியத்திற்கே இவர் தனது பங்களிப்பைச் செலுத்தியுள்ளார்.

1935 இல் இலங்கை அரசாங்கம் தொழிற்சங்க சட்ட மூலத்தினை நிறைவேற்றியதோடு இலங்கை சம சமாஜிக் கட்சி தனது அகில இலங்கை தோட்டத் தொழிலாளர் சங்கத்தை பதிவு செய்து கொண்டது. இச்சங்கம் மலையக தொழிலாளர் களிடையே அரசியல் விழிப்புணர்ச்சியினையும் வர்க்க உணர்வையும் வளர்ப்பதில் பங்காற்றியது. இடதுசாரிகள் தோட்டத்தொழிலாளர்களிடையே முன்வைத்த சித்தாந்தமான தோட்டத் தொழிலாளர்கள் இலங்கையின் மற்றைய தொழிலாளர்களுடன் ஒன்றிணைந்து போராடி ஒரு தொழிலாளர் அரசாங்கத்தை ஸ்தாபிக்க வேண்டும் என்ற கருத்து மலையகம் பற்றியெழுந்த நாவல்களில் பிரதிபலிக்கப்பட்டன.

மலையகத் தமிழ் இலக்கியத்துக்கு வித்திட்டவர்கள் எவ்வாறு தமது ஆக்கங்களில் மலையகத் தமிழர்களின் அரசியலைப் பிரதிபலித்தனர் என்பதைக் கண்ட நாம் இனி அதனை வளர்த்த மூத்த தலைமுறை எழுத்தாளர்கள் தமது ஆக்கங்களிலே அரசியல் பிரச்சினைகளை எவ்வாறு பிரதிபலித்துள்ளார்கள் என்பதைக் காண்போம்.

இம் மூத்த தலைமுறை எழுத்தாளர்களுள் திருமதி கோகிலம் சுப்பையா எழுதியுள்ள தூரத்துப்பச்சை என்ற நாவல் தோட்டத் தொழிலாளர்களுடன் நெருங்கிப் பழகி அவர்களோடு கூடிவாழ்ந்து அவர்களது துக்கங்களில் நேரடியாய் பங்கு கொண்டதால் பிறந்ததாகும். நாம் ஏற்கனவே கண்டது போல் இந் நாவலில் தமிழ் நாட்டிலுள்ள சேத்தூர் கிராமத்திலிருந்து பஞ்சம், பட்டினி, வரட்சி என்பவற்றின் பாதிப்புகளிலிருந்து தப்புவதற்காக கப்பலேறிய வேலனுடன் அவன் மகள் வள்ளி என்ற சிறுமியும் இலங்கைக்கு வந்தாள். வரும்போது அச்சிறுமி பட்ட துன்பத்தையும் இலங்கையில் கமில்டன் தோட்டத்தை அடைவதையும் விபரிக்கும் இந் நாவல் வள்ளி வளர்ந்து பெரியவளாகி செங்கமலை என்பவனை திருமணம் செய்து ராசிக் கொள்ளை ராசாத் தோட்டத்துக்குக் குடியிருக்க வருவதைப் பற்றியும் விபரிக்கப் பட்டுள்ளது. வள்ளிக்குப் பிள்ளைகள் பிறந்து அப் பிள்ளைகளுக்கு பிள்ளைகள் பிறக்கும் வரையிலான நான்கு

படிப்பகம்

www.padippakam.com



தலைமுறைகள் பற்றி எழுதப்பட்டுள்ள இந் நாவல் ஒரு தோட்டத்துப் பெண் தன் வாழ்நாளில் படும் துன்பங்கள் அத்தனையையும் விபரிக்கின்றது.

அரசியல் ரீதியில் தோட்டங்களில் தொழிற்சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்ட ஒரு காலக் கட்டத்தை இந் நாவலின் பிற்பகுதி பின்னணியாகக் கொண்டிருக்கின்றது. வள்ளியின் மகனான லட்சுமணன் தொழிற்சங்கம் அமைப்பதற்கு ஆள் சேர்த்தான் என்பதற்காக அவனுக்கு வேலையில்லை என்று சொல்லி தோட்டத்தை விட்டு வெளியேற்றப் படுகிறான். இவ்வாறு கோகிலம் சுப்பையாவின் நாவல் தோட்டத்து வாழ்வை படம் பிடித்துக் காட்டுவதோடு தொழிற் சங்கங்கள் ஆரம்பிக்கப்படவிருந்த சூழ்நிலையையும் சித்தரிக்கின்றது.

இதே தலைமுறையினை சேர்ந்த எழுத்தாளரான நந்தி தனது மலைக்கொழுந்து என்ற நாவலில் போட்டித் தொழிற் சங்கங்கள் அமைக்கப்பட்டமையால் எவ்வாறு குடும்பங்கள் தம்மிடையே பிளவுபட்டன என்பதையும் தொழிற்சங்கங்களை வளர விடாது தடுப்பதில் எவ்வாறு கணக்கப்பிள்ளையும் சின்னத்துரையும் சேர்ந்து செயற்பட்டார்கள் என்பதையும் விபரிக்கிறார். உண்மையில் நந்தி அவர்களின் மலைக்கொழுந்து தோட்டத் தொழிலாளர்களின் தொழிற் சங்க அரசியலின் ஒரு கட்டத்தைப் படம் பிடித்துக் காட்டுகின்றது. இந்நாவல் தொழிற் சங்கங்கள் தோட்டங்களில் நன்றாக வேரூன்றி விட்ட ஒரு காலக் கட்டத்தைக் காட்டுகிறது. இந்நாவலின் கதாநாயகனான மலையப்பன் ஒரு தொழிற்சங்க தலைவனாவான். இதில் தோட்டத் தொழிலாளர் இலங்கையின் மற்றைய சமுதாயங்களைச் சேர்ந்த தொழிலாளர்களுடன் இணைந்து போராடி தமது உரிமைகளைப் பெற வேண்டுமென்பது வற்புறுத்தப்படுகிறது. உதாரணமாக இந்நாவலில் ஓரிடத்தில்.

> அம்பசமுவ வீதி வழியாக ஒரு சிறு ஊர்வலம்
> ரம்புக்பிட்டியிலிருந்து வந்து முந்திய
> ஊர்வலத்துடன் சங்கமித்தது. அதில் பல
> சிங்களச் சகோதரத் தொழிலாளர் இருந்தனர்.
> அவர்களில் இளைஞர்கள் மலையப்பனைக்
> கண்டதும்! மலையப்ப சகோதரயாட்ட
> ஜயவேவா! என்று கோசமிட்டனர்...[24]

என்று குறிப்பிட்டுள்ளார். மேலும் மலையப்பன் மகாநாட்டில் சமர்ப்பிக்கப் படவிருக்கும் கோரிக்கைகள் அடங்கிய

படிப்பகம்

www.padippakam.com



ஒரு பிரசுரத்தை தன் கடிதத்துடன் யாழ்ப்பாணத்திலுள்ள சுருட்டுக் கைத்தொழிற் சங்கத் தலைவனான மயில்வாகனத்துக்கு அனுப்ப யோசித்தான் என்றும் குறிப்பிட்டுள்ளார். ஆகவே இந்நாவல் தோட்டங்களில் தொழிற்சங்கங்களினது வளர்ச்சி நிலையையும் தொழிலாளர் ஒற்றுமையின் அவசியத்தையும் வற்புறுத்தும் ஒன்றாக உள்ளது.

இதே தலைமுறையைச் சேர்ந்த சக்தி ஏ. பாலையா அவர்கள் எழுச்சி மிக்க கவிதைகளாலும் தனது கலைத் திறனாலும் மலையக சமூகத்தை விழிப்புறச் செய்தவர். "1949 ஆம் ஆண்டு முதல் சக்தியின் கவிதைகள், கட்டுரைகள் தினகரன் வீரகேசரி, சுதந்திரன் போன்ற பத்திரிகைகளில் வெளி வந்துள்ளன. வீரகேசரி பத்திரிகையின் துணை ஆசிரியராகவும் "தமிழ் ஒலி"யின் ஆசிரியராகவும் பணியாற்றிய பாலையா அவர்கள் ஒரு சிறந்த ஓவியக் கலைஞராவார். கவிமணி சீ. வி. வேலுப்பிள்ளை ஆங்கிலத்தில் வெளியிட்ட "இன் த சிலோன் ரீ காடன்", என்ற கவிதை நூலை அதன் மூலம் சிதைவுபடா வண்ணம் "தேயிலைத் தோட்டத்திலே" என்ற பெயரில் தமிழில் தந்தவரும் இவரே.

இதே தலைமுறையினைச் சேர்ந்த கண்டியிலிருந்து இலக்கிய வளர்ச்சிக்கு குறிப்பிடத்தக்க பணியாற்றியோர் திரு க. ப. சிவம், திரு ரா. மு. நாகலிங்கம் என்போராவர். க. ப. சிவம் அவர்கள் தாம் நடாத்திய "மலை முரசு" என்ற பத்திரிகையினூடாக மலையக தமிழ் இலக்கியம் வளர களமமைத்துக் கொடுத்தவர். அதே போன்று திரு ரா. மு. நாகலிங்கம் "செய்தி" என்ற பத்திரிகையினை நடாத்தி இலக்கிய வளர்ச்சிக்கு உதவினார்.

1947 இல் இலங்கை சுதந்திரம் பெற்றதன் பின்பு அமைக்கப் பட்ட ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் இந்திய வம்சாவளியினரின் குடியுரிமையினையும் வாக்குரிமையினையும் கட்டுப்படுத்தும் நோக்குடன் 1948 இலும் 1949 இலும் இரண்டு குடியுரிமைச் சட்டங்களைக் கொண்டு வந்தது. 1949 இல் இலங்கைப் பாராளுமன்ற தேர்தல்கள் திருத்தச் சட்டம் என்ற மூன்றாவது சட்டத்தையும் நிறை வேற்றியது இச் சட்டங்களின் பயனாக இலங்கையில் அப்போது வாழ்ந்த இந்திய வம்சாவளி மக்களுள் மிகப் பெரும்பான்மையோர் தமது குடியுரிமையும் வாக்குரிமையையும் இழந்தனர். இச்சட்டங்கள் நடைமுறைப்படுத்தப் படுவதனை எதிர்த்து இலங்கை இந்தியர் காங்கிரஸ் 1952 இல் ஒரு சத்தியாக்கிரக இயக்கத்தினை நடத்தியது. இச்சத்தியாக்கிரக இயக்கம் இரு பிரிவுகளாக நடத்தப்பட்டது.

படிப்பகம்

www.padippakam.com



(i) பிரதம மந்திரியின் காரியாலயத்துக்கு முன் தெரிவு செய்யப்பட்ட சத்தியாக்கிரகிகளின் உண்ணாவிரதப் போராட்டம், (ii) பிரதிநிதிகள் சபை வளவிலும் பல்வேறு அமைச்சுகளின் வளவுகளிலும் நடத்தப்பட்ட மறியல் போராட்டம் ஆனால் இச்சத்தியாக்கிரகத்தின் இலக்கு வெற்றிபெறவில்லை.

இலங்கை இந்தியர் காங்கிரஸ் மாத்தளையில் நடத்திய அதன் பத்தாவது வருடாந்த மகாநாட்டில் அதன் பெயரை இலங்கைத் 'தொழிலாளர் காங்கிரஸ் (இ. தொ. கா) என மாற்றுவதென முடிவு செய்ததோடு அதற்கென ஒரு அரசியல் பிரிவினையும் உருவாக்குவதென முடிவு செய்தது. அவ்வரசியல் பிரிவே இலங்கை இந்தியர் காங்கிரசின் வாரிசாகியது. 1956 இல் இலங்கைத் தொழிலாளர் காங்கிரசில் ஏற்பட்ட 'ஒரு பிளவு காரணமாக ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் என புதிய தொழிற்சங்கம் உருவாக்கப்பட்டது. இ.தொ.கா. யின் தலைவரான தொண்டமானுக்கும் அதில் இருந்த திரு ஏ. அசீஸ் அவர்களுக்குமிடையே ஏற்பட்ட கருத்து வேறுபாடுகளே இப் பிளவுக்குக் காரணமாகும். 1960 இல் இவையிரண்டும் இணைந்த போதிலும் 1962 ஆம் ஆண்டு மார்ச் மாதம் அவை மீண்டும் பிரிந்தன. இது போன்றே இ. தொ. கா. யில் ஏற்பட்ட இன்னொரு கருத்து வேறுபாடு காரணமாக திரு வீ. கே. வெள்ளையனும் திரு. சீ. வி வேலுப்பிள்ளையும் விலகி 1965 இல் தொழிலாளர் தேசிய சங்கம் என்ற அமைப்பினை உருவாக்கினார். திரு. எஸ். சண்முகதாசன் தலைமை தாங்கிய சீனச்சார்பு கொம்னியூஸ்ட கட்சி செங்கொடிச் சங்கம் என்றதொரு அமைப்பினை ஆரம்பித்தது. 1960 களில் இலங்கைத் தமிழரைப் பிரதிநிதித்துவப் படுத்திய சமஷ்டிக் கட்சியும் இலங்கைத் தொழிலாளர் கழகம் என்றதொரு தொழிற்சங்கத்தை ஆரம்பித்தது. இவையெல்லாம் தோட்டத் தொழிலாளர்களின் நலன்களைக் காப்பாற்றுவதற்கே ஆரம்பிக்கப்பட்டபோதும் இத்தொழிற் சங்கங்களிடயே போட்டி நிலவுவதோடு தொழிலாளர்களிடையேயும் போட்டிகளை ஏற்படுத்தி விட்டன.

இம் மூன்றாவது கட்டத்தினைப் பிரதிபலித்து எழுதியவர்களுள் என். எம். எஸ். இராமையா, தெளிவத்தை யோசப் சாரல்நாடன், பெனடிற் பாலன், மலரன்பன், மாத்தளை சோமு, மாத்தளை வடிவேலன், அந்தனி ஜீவா, குறிஞ்சித் தென்னவன் என்போர் குறிப்பிடத்தக்கவர்கள் இப்போது இலங்கையில் வாழாவிட்டாலும் குடிபெயர்ந்து வாழும் மலையக எழுத்தாளர்களான வழுத்தூர் ஒளியேந்தி, த. ரஃபேல், ந. அ. தியாகராஜன், பரமஹம்சதாசன், திருச்செந்தூரன், பி. கிருஷ்ணசாமி, ராம

படிப்பகம்

www.padippakam.com



சுப்பிரமணியம், அமரன், குமரன், சிவானந்தன், சி. பன்னீர் செல்வன், இரா. சிவலிங்கம், வீரா. பாலச்சந்திரன், ராஜ் மலைச்செல்வன், என்போரும் மலையக தமிழ் இலக்கியத்தினை வளர்ப்பதில் பங்கு கொண்டவர்களே.

இவர்களுள் 1990 இல் காலமடைந்த திரு என். எஸ் எம். இராமையா அவர்கள் குறைவாக எழுதி கணிசமான வாசகர்களின் கவனத்தை ஈர்த்தவர். "மலையகம் என்ற பிராந்தியத்திற்கேயுரிய விசேடமான தன்மைகளை கொண்டெழுந்த மலையகச் சிறுகதை இலக்கியத்திற்கு உருவம் சமைத்தவர் என்ற வகையில் ராமையா வரலாற்று முக்கியத்துவம் பெறுகிறார்.''[25] உதாரணமாக "ஒரு கூடை கொழுந்து'' என்ற சிறு கதையில் "கூடையை இறக்கி வைத்து, இடையில் கட்டியிருந்த படங்குச் சாக்கை அவிழ்த்து, சேலையை சற்று முழங்காலுக்கு மேலே தூக்கி- இல்லாவிட்டால் தேயிலை செடி கிழித்து விடுமே - மீண்டும் படங்கைச் சுற்றி கறுப்பு நிறக் கயிறு அரை ஞாண் மாதிரி இடுப்பைச் சுற்றி வளைத்து ...[26] என்று கூறி தோட்டப் பெண்களின் வேலை செய் நிலவரங்களை கண்முன் கொண்டுநிறுத்தி விடுகிறார்.

"தாங்களே பாதையும் வெட்டிப் பயணமும் போக வேண்டிய மலையக இலக்கியச் சூழலைக் கவனத்தில் கொண்டால் "தெளிவத்தை ஜோசப் ஒரு சாதனைக்காரர்''[27] என மு. நித்தியானந்தன் குறிப்பிடும் ஜோசப்புக்கு இணையாக எழுதக் கூடியவர்கள் இலங்கையின் சிறுகதை இலக்கியப் பரப்பிலே ஓரிருவரே உள்ளனர் எனலாம். "கூனல்'' என்ற தனது சிறுகதையில் அவர் தோட்டத் தொழிலாளரின் பரிதாப நிலையினை மிகவும் யதார்த்தமாகப் படம் பிடித்துக் காட்டுகிறார் உதாரணமாக "நாலு அவுன்சு பெனிங்ஸ், நாளெல்லாம் அதற்காகவே நாயாய்ப் பாடுபடும் அவனை ஒரு வீதியில் நிறுத்திவிட்டது. அன்றுதான் எடுத்தான். அதுவும் ஒரு பிடி, விற்க அல்ல, வீடு கட்ட அல்ல, குடித்துப் பார்க்க. அதையெல்லாம் யார் கேட்கப் போகின்றார்கள் ... உழுபவனுக்கு உணவு கிடைக்காத அதே சமுதாயக் கூனல்''[28] என்று எழுதியுள்ளார்.

இக் காலக்கட்டத்தை தனது நாவலில் பிரதிபலித்த யோ. பெனடிற்பாலன் தனது "சொந்தக்காரன்'' என்ற நாவலிலே தோட்டத் தொழிலாளர்களின் விடிவுக்காக தொழிற் சங்கங்கள் ஆற்றி வரும் தொண்டுகளை எடுத்துக் காட்டுகிறார். நாட்டின் வளத்துக்காக தலைமுறை தலைமுறையாக உழைத்து வரும் தொழிலாளர்களுக்கு குடியிருக்க வீடில்லை, நிலமில்லை

படிப்பகம்

www.padippakam.com



என்றால் இலங்கை மண்ணுக்கு யார் சொந்தக்காரர் என்ற கேள்வியை தனது நாவலினூடாக கேட்டு பதில் காண முனைந்தார். செ. கணேசலிங்கன் அவர்கள் குறிப்பிட்டது போல் 'அடிப்படை உரிமைகள் யாவுமே மறுக்கப்பட்டு வாழும் மக்களிடையே இன்று ஏற்பட்டு வரும் கால மாற்றங்களையும் அரசியல் தாக்கங்களையும் பெனடிற்பாலன் மறைத்து விடவில்லை''[29]

இருபத்தைந்து சிறுகதைகளுக்கு மேல் எழுதி மலையகச் சிறுகதை இலக்கியத்தில் தனக்கென ஒரு இடத்தைப் பெற்றிருக்கும் மலரன்பனின் ''கோடிச் சேலை'' என்ற சிறுகதைத் தொகுதி 1989 இல் வெளிவந்துள்ளது. ''தோட்டக் காட்டினிலே'' என்ற சிறுகதைத் தொகுதியில் இவரது மூன்று கதைகள் இடம் பெற்றிருந்தன. பேராசிரியர் சி. தில்லைநாதன் அவர்கள் குறிப்பிட்டது போல் ''மனிதனையும் அவனது பிரச்சினைகளையும் மட்டுமன்றி, மனித வாழ்வு நடைபெறும் பகைப் புலங்களையும் அவை மனிதனைப் பாதிக்குமாற்றையும் சிறுகதைகள் மூலம் சித்தரிக்கலாம்.''[30] என்பதற்கு மலரன்பனின் கதைகள் சான்றாகும்.

இதே காலக்கட்டத்தை தனது சிறுகதைகளின் மூலம் வெளிக் கொணர்வதில் வெற்றி கண்டவர்களுள் ஒருவர் மாத்தளை சோமு ஆவார். க. கைலாசபதி அவர்கள் குறிப்பிட்டது போல் ''மாத்தளைச் சோமுவின் கதைகளில் தோட்டத் துரைகளின் மனோபாவம், செயல் ஆகியவற்றின் மூலம் வர்க்கமுரண்பாடுகளும் அவற்றினடியாக எழும் கருத்தோட்டங்களும், பெறுமதிகளும், உணர்வுகளும் நுண்ணயத்துடன் தீட்டப்பட்டுள்ளன.''[31] துன்பத்தின் மத்தியிலும் வாழத்துடிக்கும் மலையக தொழிலாளர்கள் எவ்வாறு பலவிதமான சுரண்டல்களுக்கும் அடக்கு முறைகளுக்கும் உட்படுகிறார்கள் என்பதை தத்ரூபமாக தனது சிறுகதைகளில் வடிப்பதில் வெற்றி கண்டவர் மாத்தளை வடிவேலனாவார். இவரது சிறந்த கதைகள் மூன்று ''தோட்டக் காட்டினிலே'' என்ற சிறுகதைத் தொகுதியில் இடம்பெற்றுள்ளது. ஆனால் மலையக மக்களின் அரசியல் வரலாற்றினை அவரது பின் வரும் கவிதை மிகவும் சிறப்பாக வெளிக் கொணர்ந்துள்ளது.

கானல் நீர் பருக கத்துங்கடல் கடந்து
கண்ட பயன் ஏதுமின்றி கண்ணீரில் முக்குழித்து
இல்லாமை பூபாளம் ஏழ்மை நீலாம்பரிகள்
தொல்லைகள் புடள் போட தொடர்ந்து வரும்துயரை

படிப்பகம்

www.padippakam.com



முக்காடிட்ட திரையை முரண்பாட்டை அழிப்பதற்கு
முல்லோயா கோவிந்தன் முதல் முடுக்கிவிட்ட நட்சா வரை
துப்பாக்கிச் சன்னங்கள் சொருகிய மார்பகங்கள்[32]

இதே காலத்தைத் தனது கதைகளில் படம் பிடித்துக் காட்டி இலக்கிய அரங்கினுள் காலடி எடுத்து வைத்த சாரல் நாடனின் "கால ஓட்டம்" என்ற சிறுகதை பரிசு பெற்றது. இவ்வாறு சிறுகதை எழுதுவதினூடாக அறிமுகமான சாரல் நாடன் தற்போது ஒரு ஆராய்ச்சியாளனாகவும் மலையக வரலாற்றியலாளனாகவும் முதிர்ச்சியடைந்துள்ளார். சீ. வி. சில சிந்தனைகள் என்ற நூலை எமக்களித்த சாரல் நாடனின் பத்து மாத உழைப்பின் பயனாக தேசபக்தன் கோ. நடேசய்யர் என்ற நூல் தோன்றியது. இவர் இப்போது மலையக இலக்கியங்கள் பற்றிய ஆராய்ச்சிக் கட்டுரைகளையும் எழுதி வருகிறார். இதே காலக்கட்டத்தை எழுத்தில் வடித்த இன்னொரு எழுத்தாளர் திரு அந்தனி ஜீவா ஆவார். "கொழுந்து" எனும் இலக்கிய சஞ்சிகையினதும் "குன்றின் குரல்" எனும் சஞ்சிகையினதும் மூலம் இலக்கியப் பணி ஆற்றி வரும் ஜீவா அவர்கள் மலையக வெளியீட்டகம் என்ற அமைப்பினை ஏற்படுத்தி மலையக எழுத்தாளர்களின் ஆக்கங்களை அச்சேற்றுவதில் முன்னின்று உழைத்து வருகிறார்.

இக் காலக்கட்ட மலையக அரசியலை தமது கவிதைகளில் வடித்துத் தந்தவர்களுள் குறிஞ்சித் தென்னவன், எம். சி. எம். சுபைர், தமிழோவியன், எஸ். பி. தங்கவேல், க. ப. லிங்கதாசன், சண், மலைத்தம்பி, பண்ணாமத்து கவிராயர் என்போர் குறிப்பிடத் தக்கவர்கள். இவர்களுள் மலையக மக்களின் அரசியல் அபிலாசைகளை மிகவும் ஆழமும் வீச்சும் நிறைந்த கவிதைகளாக ஆக்கித் தந்தவர் குறிஞ்சித் தென்னவன் ஆவார்.

படிப்பகம்

www.padippakam.com

# IV

## மலையக இலக்கியங்களும் தோட்டங்கள் தேசிய மயமாக்கப்பட்டமையும்

இலங்கை வாழ் மலையகத் தமிழரின் அரசியல் அந்தஸ்து 1960 களிலும் 1970 களிலும் பெரும் மாற்றங்களுக்குட்பட்டது. நீண்ட காலமாக தீர்வு காணப்படாதிருந்த இம் மக்களின் பிரஜாவுரிமைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் நோக்கில் 1964 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் அப்போதைய இலங்கைப் பிரதமர் திருமதி ஸ்ரீ மாவோ பண்டாரநாயக்காவும் இந்தியப் பிரதமராயிருந்த லால் பகதூர் சாஸ்திரியும் புதுடெல்லியில் சந்தித்து பேச்சுவார்த்தைகளை நடத்தி ஒரு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர். இது இலங்கை - இந்திய ஒப்பந்தம் - 1964 அல்லது ஸ்ரீ மாவோ - சாஸ்திரி ஒப்பந்தம் என அழைக்கப்படுகின்றது. இப்பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டபோது இலங்கையில் 9,750,00 நாடற்ற இந்திய வம்சாவளியினர் வாழ்ந்தனர் எனக் கணக்கிடப்பட்டது. இவர்களுள் 5,25000 பேர்களுக்கு இந்தியா இந்தியப் பிரஜாவுரிமை வழங்குவதெனவும் 3,000,00 பேருக்கு இலங்கை இலங்கைப் பிரஜாவுரிமை வழங்குமெனவும் முடிவு செய்யப்பட்டது. எஞ்சியுள்ள 1,500,00 பேர்களின் எதிர்காலம் பற்றி பின்னர் ஒரு சந்தர்ப்பத்தில் முடிவு செய்வது எனவும் தீர்மானிக்கப்பட்டது. இவ்வொப்பந்தம் செய்யப்பட்ட எத்தனையோ ஆயிரம் மைல்களுக்கு அப்பாலிருந்த ஆயிரக்கணக்கான குடும்பங்கள் பகடைக் காய்களாக்கப் பட்டார்கள். அத்தோடு வெறும் எண்களினால் கூட்டிக் கழித்த இவ்வொப்பந்தம் இப் பரிதாபகரமான உயிர்களின் பிரச்சினைகளை தீர்த்து விட்டனவா என்பது கேள்விக் குறியாகவே இருந்து வருகிறது.

இவ்வொப்பந்தத்தின் கீழ் 1991 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாத இறுதிவரை 3,35167 பேர் வரையில் இந்தியாவுக்கு திரும்பிச் சென்றதாக அறிவிக்கப்பட்டது. அதே திகதி வரையில் 2,36,000 பேர்களுக்கு இலங்கைப் பிரஜாவுரிமை வழங்கப் பட்டதாகவும் அறிவிக்கப்பட்டது. இவ்வொப்பந்தம் நடைமுறைப்

படிப்பகம்

www.padippakam.com



படுத்துவதற்கான கால எல்லை 15 வருடங்கள் எனவும் தீர்மானிக்கப்பட்டது. இவ்விடைக் காலத்தில் மலையகத் தமிழர் பல உரிமைகளை இழந்து வாழ வேண்டிய நிலை உருவானது - உதாரணமாக இவ்வுடன்படிக்கைக்குப் பின்னரே இலங்கையரல்லாதவர்கள் நிலம் வைத்திருத்தலைக் கட்டுப்படுத்தும் சட்டம் கொண்டுவரப்பட்டது. இலங்கையரல்லாதோர் வேலை வாய்ப்புகள் பெறுவதைத் தடுக்கும் சட்டமும் நிறைவேற்றப்பட்டது. மேலும் உயர் கல்வி கற்பதிலும் இலங்கைப் பிரஜாவுரிமை அற்றவர்களுக்கும் 1964 ஆம் உடன் படிக்கையின் கீழ் இந்தியப் பிரஜைகளானோர் உயர் கல்வியினை இலங்கையில் கற்கும்போது ஏனைய மாணவர்களுக்கு வழங்கப்பட்ட சலுகைகள் இவர்களுக்கு மறுக்கப்பட்டது. கல்விக் கட்டணம், பரீட்சைக் கட்டணம் என்பன இவர்களிடமிருந்து அறவிடப் பட்டதோடு அரசாங்க கடன் வசதி பெறுவதும் மறுக்கப்பட்டது. எல்லாவற்றிற்கும் மேலாக இவ்வொப்பந்தத்தின் கீழ் இந்தியாவுக்கு திரும்பிச் சென்றோர் பலர் தமது பிள்ளைகளையும் உறவினரையும் பிரிந்தும் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது. இக் காலக்கட்டதில் மலையகத் தமிழர் எதிர் நோக்கிய பிரச்சினைகளை தொ. சிக்கன்ராஜ் அவர்கள் தனது “தாயகம்” என்ற குறு நாவலில் சிறப்பாக வெளிக் கொணர்ந்துள்ளார். இக் குறு நாவலுக்கு வழங்கிய முன்னுரையில் திரு. சீ. வி. வேலுப்பிள்ளை அவர்கள் “இலங்கையில் தேயிலைத் தோட்டங்களை உற்பத்தி செய்யக் கொண்டு வரப்பட்ட மக்கள் வண்டி மாடுகளைப் போல, அபயக் குரலெழுப்பக் கூட உரிமையற்றுப் புழுங்குகிறார்கள். இவர்களது விபரிக்க முடியாத உள்ளக் குமுறல்களையும், ஆற்றொணாத் துயரங்களையும் ஒருவாறு வெளிப்படுத்துகிறார் ஆசிரியர்”[33] எனக் குறிப்பிட்டுள்ளார். இக் குறுநாவலின் கதாநாயகனான குமார் தனக்குத் தாயகம் இந்தியாவா? இலங்கையா? என முடிவு செய்வதில் சிரமப் படுகிறான். ஓரிடத்தில் குமார் “உண்மை தான் இனிமேல் நானோ என்னைப் போல் வாழ்க்கை அமைத்தவர்களோ இப்படியே இருக்கக் கூடாது. குடியுரிமையற்றவர்களாக உரிமை பாராட்டிக்கொள்ள ஒரு நாடின்றி வாழ முடியாது”[34] என்று குறிப்பிடுவதாக ஆசிரியர் எழுதியுள்ளார். இக் காலக் கட்டத்தை பிரதிபலித்து எழுதிய மு. சிவலிங்கம், சி. பன்னீர் செல்வன் போன்றோர் தமது சிறுகதைகளில் நாடற்றவர்களாக்கப்பட்ட மக்களின் எதிர்கால ஆவல்களையும் ஏமாற்றங்களையும் சித்தரித்துள்ளனர். உதாரணமாக மு. சிவலிங்கத்தின் “இதுவும் ஒரு கதை” நூரளை சண்முக நாதனின் “ராமையா இந்தியாவுக்கு போகப் போகிறான்” என்ற சிறு கதைகளை இங்கு குறிப்பிடலாம்.

படிப்பகம்

www.padippakam.com



ஆகவே 1964 க்கும் 1971 க்குமிடைப்பட்ட காலத்தில் எழுந்த மலையக இலக்கியங்கள் ஸ்ரீ மாவோ - சாஸ்திரி ஒப்பந்தத்தின் கீழ் தாய் நாட்டுக்குத் திரும்பிச் செல்லவிருந்த, சென்ற தொழிலாளர்களின் அவல நிலைகளை சித்தரிப்பனவாக அமைந்தன.

1970 இல் ஆட்சிக்கு வந்த ஐக்கிய முன்னணி அரசாங்கம் 1972 இல் நிலச் சீர்திருத்தச் சட்டம் ஒன்றை நிறைவேற்றியது. இதன் கீழ் நெற்காணி எனின் 25 ஏக்கர்களும் சாதாரண காணி எனின் 50 ஏக்கர்களையும் ஒரு தனிப்பட்டவர் வைத்திருக்க உரிமை வழங்கப்பட்டது. மேலதிகமானவையெல்லாம் அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம், தோட்ட அபிவிருத்தி சபை (உசவசம) அல்லது ஜனவசம என்பனவற்றின் வசம் ஒப்படைக்கப் பட்டன. இச்சட்டத்தின் கீழ் பெருந்தோட்டங்களும் தேசிய மயமாக்கப்பட்டன. முதற் கட்டத்தில் தேசிய மயமாக்கப்பட்ட நிலங்களின் அளவு 559,377 ஏக்கர்களாகும். இவற்றுள் தேயிலை தோட்டங்களின் அளவு 1,35,760 ஏக்கர்களும் இறப்பர் தோட்டங்களின் அளவு 8,2944 ஏக்கர்களுமாகும்.

தேசியமயமாக்கல் என்பது வழமையாக தொழிலாளர்களுக்கு நிர்வாகத்தில் இடமளிக்க வேண்டிய தொரு நடைமுறையாகும். ஆனால் இலங்கையில் நிலச் சீர்திருத்தம் அல்லது தோட்டங்களைத் தேசிய மயமாக்கியமை தோட்டங்களிலிருந்து தொழிலாளர்களை வெளியேற்றும் ஒரு நிகழ்ச்சியாகியது. அரச தோட்ட கூட்டுத்தாபனங்களுக்கு AD–RI என்ற இலக்கத்தோடு இவ்வரசு அனுப்பிய சுற்றறிக்கையில் பின் வருவோருக்கு மாத்திரமே வேலை வழங்கப்பட வேண்டும் என்று குறிப்பிட்டது.

1. தோட்டத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள ஏற்கனவே பிரஜாவுரிமை உடையவர்கள்.
2. தோட்டத்தில் பதிவு செய்து தற்போது இங்கு வசிக்கும் இலங்கைப் பிரஜைகள்.
3. கிராமங்களிலிருந்து வேலை செய்ய விரும்பும் பிரஜாவுரிமையுடையவர்கள்.
4. தோட்டங்களில் பதிவு செய்த இலங்கைப் பிரஜாவுரிமைக்கு விண்ணப்பித்துள்ளவர்கள்.

படிப்பகம்

www.padippakam.com



தோட்டங்கள் தேசிய மயமாக்கப்பட்ட காலகட்டத்தில் பல்வேறு தோட்டங்களில் தமிழ் தொழிலாளர்கள் பலவந்தமாக வெளியேற்றப்பட்டு காணிகள் சிங்கள மக்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டன. இதனால் இருப்பிடமற்ற நிலையில் தமிழ் தொழிலாளர்கள் தெருவோரம் வாழ்க்கையை நடத்தும் நிலைமைக்கு ஆளாகியதோடு பிச்சையெடுத்து வாழவேண்டிய நிலைக்கும் தள்ளப்பட்டார்கள்.

1974 இல் அப்போதைய இந்திய, இலங்கைப் பிரதமர்களாகவிருந்த திருமதி இந்திராகாந்தியும் திருமதி ஸ்ரீ மாவோ பண்டாரநாயக்காவும் புதுடெல்லியில் சந்தித்து எஞ்சியிருந்த நாடற்றவர்கள் 1,50,000 பேர்களில் அரைப் பங்கினருக்கு (75000) இந்தியப் பிரஜாவுரிமை வழங்குவதெனவும் மிகுதி அரைப் பங்கினருக்கு (75,000) இலங்கை பிரஜாவுரிமை வழங்குவதெனவும் ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டனர்.

1964 ஆம் 1974 ஆம் ஆண்டுகளில் இடம் பெற்ற இந்திய இலங்கை ஒப்பந்தங்களை நடைமுறைப் படுத்த வேண்டிய கால எல்லை 1981 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதத்துடன் முடிவடைந்த போதிலும் அவற்றை முழுமையாக நடைமுறைப் படுத்துவதில் தடைகள் இருந்தன. இவ்வொப்பந்தங்களின் கீழ் இந்தியா 6,00,000 பேர்களுக்கு இந்தியப் பிரஜாவுரிமை வழங்கத் தயாராகவிருந்த போதிலும் 506,000 இந்திய வம்சாவளியினரே இந்தியப் பிரஜாவுரிமைக்கு விண்ணப்பித்திருந்தனர். அதனால் 94,000 பேர்கள் இவ்வொப்பந்தங்களுள் அடங்காதவராய் இருந்தனர். இந்தியாவினைப் பொறுத்த வரை மேற்சொன்ன ஒப்பந்தங்கள் காலாவதியாகி விட்டமையால் எஞ்சியுள்ளவர்களுக்கு பிரஜாவுரிமை வழங்குவது தமது பொறுப்பல்ல என வாதிட்டது.

1977 இல் அதிகாரத்துக்கு வந்த ஐக்கிய தேசியக் கட்சியில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் (இ. தொ. கா) 1978 இல் சேர்ந்து கொண்ட போதிலும் 1986 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 31 ஆம் திகதிக்கு முன்பு இலங்கைப் பாராளுமன்றம் இந்தியத் தொழிலாளர்களிடையே காணப்படும் நாடற்றவர் நிலையினை முடிவுக்குக் கொண்டு வர வேண்டும் என்றதொரு தீர்மானத்தை 1985 டிசம்பர் மாதம் 3ம் திகதி நிறைவேற்றியது. அதே தினத்தில் இ. தொ. கா தேசியக் கவுன்சில் பொங்கல் தினத்திலிருந்து புது வருடம் வரைக்கும் ஒரு பிரார்த்தனை இயக்கம் நடத்தப்பட வேண்டும் என முடிவு செய்து அவ்வாறானதொரு பிரார்த்தனை இயக்கத்திலும் ஈடுபட்டது. ஆனால்

படிப்பகம்

www.padippakam.com



1986 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 15ம் திகதி ஜனாதிபதியுடன் இ. தொ. கா. நடத்திய பேச்சுவார்த்தைகளின் போது நாடற்றவர் பிரச்சினைக்கு ஒரு இணக்கம் காணப்பட்டது. அதன்படி இலங்கையிலுள்ள நாடற்றவர் அனைவருக்கும் பிரஜாவுரிமை வழங்கும் சட்டம் 1986 இல் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது (சட்ட எண் 5, 1986) இச் சட்டத்தின் பிரகாரம் 1964 ஆம் ஆண்டுகளில் இலங்கை இந்திய ஒப்பந்தங்களின்படி 3,75000 பேர்களுக்கு இலங்கை பிரஜாவுரிமை வழங்கப்படும். அத்தோடு இலங்கைப் பிரஜாவுரிமைக்கு விண்ணப்பித்துள்ள எஞ்சியுள்ள 94,000 பேர்களுக்கு பதிவு மூலம் இலங்கைப் பிரஜாவுரிமை வழங்கப்படும். அதே சமயம் இச் சட்டம் அமுலுக்கு வந்த 18 மாத காலத்துள் 84,793 பேர்களுக்கு இந்தியா இந்தியப் பிரஜாவுரிமை வழங்கும் எனவும் ஒப்புக்கொள்ளப்பட்டது.

1971 க்குப் பின் தோட்டங்கள் தேசியமயமாக்கப் பட்டமையால் தோட்டத் தொழிலாளர்கள் பட்ட இன்னல்களை தி. ஞானசேகரன் தனது "குருதி மலை" என்ற நாவலில் மிகவும் யதார்த்தமாக வெளிக் கொண்டுவந்துள்ளார். உதாரணமாக இவர் தனது நாவலில் ஒரு சிங்களப் பாத்திரத்ினூடா "அப்புடி சொல்லவேனாங் தலைவர் இப்ப தோட்டமெல்லாம் அரசாங்கம் எடுத்திருக்குத்தானே. நம்ப எல்லாத்துக்கும் ஒரே மாதிரிதாங் . . . நம்ப மந்திரி வந்தா நாங்க எல்லாங் வரத்தானே வேனுங்"[35] என்று குறிப்பிடுவதன் மூலம் எவ்வாறு குறுகிய அரசியல் தோட்டங்களுக்குள் புகுந்தது என்பதைக் காட்டுகிறார்

இக் காலக் கட்டத்தை பின்னணியாகக் கொண்டு எழுதிய புதிய எழுத்தாளர்கள் பலர் தோன்றியுள்ளனர். இவர்களுள் மொழிவரதன் குறிப்பிடத்தக்கவர். இவரின் சிறு கதைகள் சில "மேகமலைகளின் ராகங்கள்" என்ற தொகுப்பாக வெளிவந்துள்ளது. இதில் அவர் "தோட்டங்கள் தேசியமயமாக்கப் பட்டால் தமது வாழ்வில் ஒளிவீசும் என்ற அரசியல்வாதிகளின் பேச்சை நம்பி ஏமாறும் மக்கள் வாழ்வில் மாற்றம் தேவையெனில் போராட்டம் ஒன்று வேண்டும் என்று கூறும்"[36] தொழிலாளர்களை பாத்திரங்களாக கொண்டு வந்துள்ளார்.

தனது கவிதைகளின் மூலம் மலையகத் தமிழ் இலக்கியத்தில் தனக்கென தனியானதொரு இடத்தைப் பிடித்துள்ளவர் சு. முரளிதரன் ஆவார். மலையக வெளியீட்டகம் இவரது புதுக் கவிதைகளை "தியாக இயந்திரங்கள்" என்ற நூல் வடிவில் வெளியிட்டுள்ளது. உதாரணமாக தியாக யந்திரங்கள் என்ற கவிதையிலிருந்து சில வரிகள்.

படிப்பகம்

www.padippakam.com



தொழிற்சங்கங்கள்
உன் நிழலில்
ஒதுங்கின!
இடி மின்னல்
மழை புயல்களுக்கு
போலவே
தேர்தல்களுக்கும்
பார்வையாளனாய்
இருந்தாய்...[37]

படிப்பகம்

www.padippakam.com

# V

# முடிவுரை

"மலையகத் தமிழரின் அரசியல் வரலாறும் இலக்கியங்களும்" என்ற இந்த ஆய்வினை மேற்கொண்டதன் அடிப்படை நோக்கம் மலையகம் பற்றியெழுந்த இலக்கியங்களில் எந்தளவுக்கு அங்கு வாழும் மக்களின் அரசியற் பிரச்சினைகள் அல்லது அபிலாசைகள் பிரதிபலிக்கப்பட்டுள்ளன என்பதை மதிப்பீடுவதேயாகும்.

மலையக இலக்கியம் எந்தளவுக்கு அங்கு வாழும் மக்களின் அரசியல் பிரச்சினைகளை பிரதிபலித்துள்ளது எனச் சரியானதொரு மதிப்பீட்டினை செய்வதற்கு முதலில் இந் நூலில் அறிமுகம் என்ற பகுதியில் அரசியல் இலக்கியம் என்றால் என்ன என்பதற்கு வழங்கிய விளக்கத்தினை நோக்குதல் அவசியமாகும். அது பின்வருமாறு: அரசியலைப் பிரதிபலிக்கும் இலக்கியம் என்பது ஆதிக்கம் செலுத்தும் அரசியல் சிந்தனை அல்லது அரசியல் சூழ்நிலையினை பகைப் புலமாகக் கொண்ட அரசியல் சூழ்நிலையினை அதிகம் திரித்துக் கூறாத ஆய்வினை மேற்கொள்ளக் கூடிய ஒரு இலக்கியத்தினையே நாம் அரசியலைப் பிரதிபலிக்கும் இலக்கியம் எனலாம்.

மேற்சொன்ன வரைவிலக்கணத்தினை அடிப்படையாகக் கொண்டு மலையக இலக்கியத்தினை நோக்கின் ஆதிக்கம் செலுத்தும் அரசியல் சிந்தனை என்பதை மலையக நாவல்கள் பெருமளவு பிரதிபலிக்கவில்லை எனலாம். ஏனெனில் இலங்கையில் சுதந்திரத்திற்கு முன்பு ஆதிக்கம் செலுத்திய அரசியல் சிந்தனை பிரித்தானிய காலனியாட்சியாகும். அவ்வாட்சியில் இலங்கையர்களது நன்மைகள் முக்கியத்துவப்படுத்தப்படவில்லை. 1931 க்குப் பின்புதான் தொழிலாளர்கள் நலன்காக்கும் சட்டங்கள் இயற்றப்பட்டன. சுதந்திரத்தின் பின்னர் இலங்கையில் மக்களாட்சி நடைமுறைக்கு வந்த போதும் அது ஆங்கிலம் கற்ற உயர் மத்திய தர வர்க்கத்தினரின் ஆட்சியாகவே இருந்தது. இந்த ஆட்சிதான் மலையக மக்களில் பெரும்பான்மையோ

படிப்பகம்

www.padippakam.com



ரின் குடியுரிமையினைப் பறித்தது. ஆனால் ஆதிக்கம் செலுத்தாத அரசியல் சிந்தனைகளைப் பிரதிபலித்து இலக்கியங்கள் பல எழுந்துள்ளன. உதாரணமாக மார்க்சிய அரசியல் சிந்தனையினை அடியொட்டி தொழிலாளர் அரசாங்கம் அமைக்கப்பட வேண்டும் என்ற சிந்தனை மலையக இலக்கியங்களில் இடம் பெற்றுள்ளமையைக் காண்கிறோம். யோ. பெனடிக் பாலனின் 'சொந்தக் காரன்' என்ற நாவல் இந்தச்சிந்தனையினையே அடிப்படையாகக் கொண்டதே. இருந்தும் நிலவுகின்ற அரசியல் சூழ்நிலையினை அடிப்படையாகக் கொண்டும் இலக்கியங்கள் எழுந்துள்ளமையினைக் காண்கிறோம். திருமதி கோகிலம் சுப்பையாவின் தூரத்துப் பச்சையின் பிற்பகுதியும் நந்தியின் மலைக் கொழுந்தும் தோட்டங்களில் ஏற்பட்டு வந்த மாற்றங்களை அல்லது தொழிற் சங்கங்கள் எழ இருந்த காலப்பகுதியினை பகைப் புலமாகக் கொண்டெழுந்தனவே. ஆகவே மலையக இலக்கியத்தில் தொழிற் சங்கங்கள் பிரதான இடத்தை வகிக்கின்றன எனலாம். இது தவிர்க்க முடியாததே. ஏனெனில் சுதந்திரத்துக்கு முன்னர் தொழிலாளர்களின் அடிப்படை உரிமைகளுக்குப் போராட வேண்டிய கடமையைத் தொழிற் சங்கங்களே எடுத்துக் கொண்டன. சுதந்திரத்துக்குப் பின்னர் மலையக மக்களின் குடியுரிமை பறிக்கப் படாதிருந்திருந்தால் அங்கு அரசியல் கட்சிகள் தோன்றி மலையக அரசியலை தேசிய அரசியலுக்குள் இட்டுச் சென்றிருக்கும். ஆனால் மலையகத் தொழிலாளர்களின் அரசியல் உரிமைகளுக்காக தொழிற்சங்கங்களே தொடர்ந்தும் போராட வேண்டிய சூழ்நிலையில் இருந்தன.

இங்குதான் அரசியல் முக்கியத்துவம் பெற்றது. சில தொழிற்சங்கங்கள் இத் தமிழ் தொழிலாளர்களின் ஒற்றுமையினை வற்புறுத்தி தனித்து போராட வேண்டிய அவசியத்தை முன்வைக்க வேறு சில தொழிற்சங்கங்களோ மார்க்சிய சிந்தனையின் அடிப்படையில் மற்றைய சமுதாயங்களின் தொழிலாளர்களோடு இணைந்து போராட வேண்டிய அவசியத்தை வற்புறுத்தின. இச் சர்ச்சைகள் மலையக இலக்கியத்தில் பிரதிபலிக்கப்பட்டமையை நாம் காண்கிறோம்.

கவிதையும் அரசியலும் என்பது பற்றி எழுதிய கே. எஸ். சிவகுமாரன் அவர்கள் அரசியற் கவிதை என்றால் என்ன என்பதற்கு ஆர்னல்ட் கெட்டில் என்பவரை மேற்கோள் காட்டி பின்வருமாறு கூறுகிறார், அவை பொதுமக்கள் சம்பந்தப் பட்ட பிரச்சினைகளையும் கொள்கைகளையும் குறிப்பன. விரும்பத்தகாத போக்குகளை வெறுமனே சுட்டிக் காட்டுவதுடன் நின்று

படிப்பகம்

www.padippakam.com



விடாது, அவற்றை மாற்றவும் வலியுறுத்தவும் துணிவன. அரசியலை உன்னதமான, தனித்துவமான முறையில் சொல்லும் படைப்பும் கவிதையாகிறது. அரசியல் கவிதையில் பிரச்சாரம் கலை நுட்பமாக அமையின் அது எழுப்பும் சலனம் வீறு கொண்டதாக இருக்கும்.[38]

மேற்சொன்ன விளக்கத்தை அடிப்படையாகக் கொண்டு பார்க்கும் போது மலையகத்தில் அரசியல் கவிதைகள் பல எழுந்துள்ளமையைக் காண்கிறோம். ஆரம்ப எழுத்தாளர்களான சி. வி. வேலுப்பிள்ளை, கே. கணேஷ் என்பவர்களோடு குறிஞ்சித் தென்னவன், முரளிதரன் போன்றோரும் உன்னதமானதும் தனித்துவமானதுமான கவிதைகளைப் புனைவதில் வெற்றி கண்டுள்ளார்கள் எனலாம்.

மலையக இலக்கிய வளர்ச்சியினை கட்டங்களாகப் பிரித்துப் பார்க்கையில் முதலாவது கட்டமாகிய 1928 தொடக்கம் 1931 வரையுள்ள காலப்பகுதியில் மலையக மக்களின் அரசியல் வரலாற்றை வாய் மொழி இலக்கியங்களே பிரதிபலித்துள்ளமையினைக் காண்கிறோம். உதாரணமாக பின்வரும் பாடல் அவர்கள் தென்னிந்தியாவிலிருந்து கப்பலில் வந்ததை சுவை பட எடுத்தியம்புகின்றது.

வாடையடிக்குதடி
வாடைக் காத்து வீசுதடி
சென்னல் மணக்குதடி
சேர்ந்து வந்த கப்பலிலே
பழமும் எடுக்கவில்லை
பழைய சோறும் திங்கவில்லை
வீட்டுக்குப் போகவில்லே
வேகுதையா மனசு[39]

அடுத்த கட்டமாகிய 1931 தொடக்கம் 1948 வரையுமுள்ள காலப் பகுதியிற்றான் மலையக இலக்கியத்துக்கான வித்துக்கள் ஊன்றப் பட்ட காலம். இக் காலப் பகுதியின் அரசியல் வரலாறு கோ. நடேசய்யர், சி. வி. வேலுப்பிள்ளை ஓரளவுக்கு கே. கணேஸ் என்பவர்களது படைப்புகளிலும் திருமதி கோகிலம் சுப்பையாவின் எழுத்துகளிலும் பிரதி பலிக்கப்பட்டுள்ளமையைக் காண்கிறோம். இக் காலக் கட்டத்தினை தொழிற் சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்ட காலம் எனலாம். இதனை அக்கால இலக்கியங்கள் எடுத்தியம்புகின்றன. அடுத்த கட்டமான 1948 - 1964 வரையுள்ள காலம் தொழிற் சங்கங்கள்

படிப்பகம்

www.padippakam.com



வேரூன்றி விட்ட காலமாயிருக்கிறது. ஆனால் தொழிற் சங்கங் களுக்கிடையில் போட்டிகள் நிலவிய காலமாகும். இப் போட் டிகள் நந்தி. பெனடிக்ற் பாலன், போன்றோரது எழுத்துக்களில் பிரதிபலிக்கப்பட்டுள்ளது. ஆனால் இக் காலத்து பிரதான அர சியல் பிரச்சினையான குடியுரிமை பறிக்கப்பட்டமை பற்றிய அரசியல் பின்னணி பற்றி இலக்கியங்கள் எழாமை ஒரு குறைபாடே.

1964 தொடக்கம் 1971 வரையுமுள்ள காலப்பகுதி மலையக மக்களுள் ஒரு பகுதியினர் தாயகமான இந்தியாவுக்குத் திரும்பிச் சென்ற காலப்பகுதியாகும். அதாவது ஸ்ரீமா சாஸ்திரி ஒப்பந்தம் நடைமுறைப்படுத்தப் பட்ட காலப்பகுதியாகும். இந் நிகழ்ச்சியை அடிப்படையாகக் கொண்டு சிக்கன் ராஜுவின் குறு நாவலும் பல சிறு கதைகளும் எழுந்துள்ளன. 1971 க்கு பின்பு நடந்த அரசியல் நிகழ்வுகளை சேகரனும், மொழிவரதனும், முரளிதரனும் தமது படைப்புகளில் வெளிக் கொணர்ந்துள் ளார்கள்.

ஆகவே மலையக இலக்கியங்களில் அம் மக்களின் அர சியல் பிரச்சினைகளும், அநீதிகளும், அடக்கு முறைகளும் கணி சமானளவுக்கு வெளிக் கொணரப் பட்டுள்ளமையினைக் காண் கிறோம் ஆனால் அச்சில் வெளிவந்த நூல்களின் எண்ணிக்கை மிகவும் குறைவாகவே உள்ளது இப்போது மலையக எழுத்தா ளர்களின் ஆக்கங்களை வெளியிடுவதற்கென பல அமைப்புகள் உருவாகியுள்ளதால் எதிர்காலத்தில் பல இலக்கிய ஆக்கங்கள் நூலுருப்பெற வாய்ப்புண்டு எனலாம்.

இறுதியாக, இலக்கியம் சமூகத்தின் ஆத்மா ஆயின் மலையக தமிழ் சமூகத்தின் ஆத்மாவினை எழுத்தாளர்கள் வெளிக் கொணர்வதில் வெற்றிகண்டுள்ளார்களா? ஆம் மலை யகத் தோட்டத் தொழிலாளர்களுக்கு வரலாற்று ரீதியாக இழைக்கப்பட்ட அநீதிகளை சுட்டிக் காட்டுவதில் மலையக இலக்கியம் ஓரளவு வெற்றி கண்டுள்ளது எனலாம்.

படிப்பகம்

www.padippakam.com

# குறிப்புகள்

1. க. கைலாசபதி, "முன்னுரை" தோட்டக் காட்டினிலே (மாத்தளை: மாத்தளை தமிழ் எழுத்தாளர் ஒன்றியம், 1980), ப. 1

2. சாரல் நாடன், "மலையகம் வளர்த்த தமிழ்" கொழுந்து இதழ் 7, மே 1990, ப. 2

3. துரை மனோகரன், "மலையகச் சிறுகதைகள் ஒரு மதிப்பீடு" ஊற்று-தொகுதி 8, இல 4, ஐப்பசி - மார்கழி 1980, ப.5

4. சி. வி. வேலுப்பிள்ளை, நாடற்றவர் கதை (நீலகிரி: ஜலண்ட் அறக் கட்டளை வெளியீடு, 1987) ப. 18

5. க. கைலாசபதி, தமிழ் நாவல் இலக்கியம் (சென்னை: பாரி நிலையம், 1968), ப. 250

6. மு. நித்தியானந்தன், "ஆக்க இலக்கியமும் அரசியலும்" ஆக்க இலக்கியமும் அறிவியலும் (யாழ்ப்பாணம்: யாழ்ப் பாண வளாக தமிழ்த்துறை வெளியீடு, 1977), ப. 133

7. க. கைலாசபதி தமிழ் நாவல் இலக்கியம் மேற்படி, ப. 254

8. த. ஜெயகாந்தன், ஒரு இலக்கியவாதியின் அரசியல் அனுப வங்கள் ப.

9. Harish Trivedi, ed The American Political Novel Critical Esssays (New Delhi; Allied Publishers Private Limited 1984), P. 6

10. புதுமைப் பித்தன், "துன்பக் கேணி" புதுமைப் பித்தன் கதைகள் (சென்னை: ஸ்டார் பிரசுரம், 1940), ப. 12

11. கோகிலம் சுப்பையா, தூரத்துப் பச்சை (கொழும்பு: வீர கேசரி, 1973) ப. 8

12. சி. வி. வேலுப்பிள்ளை, மேற்படி, ப. 30

13. பி. எஸ். மணியம், "தோட்டப் பாடல்கள் சொல்லும் சோகக் கதைகள்" தோட்டக் காட்டினிலே வெளியீட்டு விழா சிறப்பு மலர் (மாத்தளை: தமிழ் எழுத்தாளர் ஒன்றியம், 1980)

14. மேற்படி

15. மேற்படி

16. மேற்படி

17. மேற்படி

18. மேற்படி

படிப்பகம்

www.padippakam.com



19. அந்தனி ஜீவா, "மலையகமும் கவிதைகளும்" மல்லிகை நவம்பர் - டிசம்பர், 1989, ப. 29
20. சாரல் நாடன், "மலையகம் வளர்த்த தமிழ்" கொழுந்து இதழ் 7, மே 1990, ப. 5
21. தங்கதேவன், "ஒரு கவிஞனும் ஒரு தொழிற்சங்கவாதியும்" மல்லிகை மே 1979, ப. 3
22. மேற்படி, ப. 7
23. நவசக்தி, 1943
24. நந்தி, மலைக் கொழுந்து (யாழ்ப்பாணம்: ஆசீர்வாதம் அச்சகம், 1964) ப. 162
25. மு. நித்தியானந்தன் "ராமையா கதைகள் பற்றி . . ." ஒரு கூடை கொழுந்து (நல்லூர்; வைகறை, 1980) ப. 12
26. எஸ். எம். எஸ். ராமையா, "ஒரு கூடை கொழுந்து" (நல்லூர்: வைகறை, 1980) ப. ப. 68 - 69
27. மேற்படி, ப. 72
28. தெளிவத்தை யோசப், "கூனல்" நாமிருக்கும் நாட்டே நல்லூர்: வைகறை. 1979), ப. 123
29 செ. கணேசலிங்கன் 'முன்னுரை" சொந்தக்காரன்
30. சி. தில்லைநாதன், "அணிந்துரை" கோடிச் சேலை (மாத்தளை: சுஜாதா பிரசுரம், 1989) ப. 11
31. க. கைலாசபதி, "முன்னுரை" தோட்டக்காட்டினிலே-மேற்படி
32. மலரன்பன், மாத்தளை சோமு, மாத்தளை வடிவேலன் தோட்டக் காட்டினிலே வெளியீட்டு விழா சிறப்பு மலர் மேற்படி
33. சீ. வி. வேலுப்பிள்ளை "முன்னுரை" தாயகம்
34. தொ. சிக்கன் ராஜு தாயகம் (நாவல்)
35. தி. ஞானசேகரன், குருதி மலை (கொழும்பு: வீரகேசரி, 1979), ப. 7.
36. மொழிவரதன், மேக மலைகளின் ராகங்கள் (கொழும்பு: மலையக வெளியீட்டகம், 1988), ப 6
37. சு. முரளிதரன், தியாக யந்திரங்கள் (கண்டி: மலையக வெளியீட்டகம், 1986), ப. 23
? கே. எஸ் சிவகுமாரன் "கவிதையும் அரசியலும்" மல்லிகை 18 வது ஆண்டு மலர் 82, ப. 51
அந்தனி ஜீவா, "மலையகமும் கவிதையும்" மல்லிகை நவம்பர் - டிசம்பர், 1989, ப. 29

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

Rs. 15/-

படிப்பகம்